# நினைவு மலர்



## அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்

அவர்கள் இறைவனோடொன்றியமை குறித்த நினைவு மலர்.

16-06-2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் - கனகபுரம் கிளிநொச்சியைப்

பிறப்பிடமாகவும்,

கனடா மிசிசாகாவை

வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

31ஆம் நாள்

# நினைவுமலர்

14 - 06 - 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்






வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்பட்டிருக்கும் எமது அன்பிற்கும்
பாசத்திற்குமுரிய குடும்பத் தலைவன்

# அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்
# அவர்களின் பாதார விந்தங்களுக்கு
# இம்மலர் சமர்ப்பணமாக...

முந்தை வினைப்பயனால் தந்தையென வந்துதித்து
சிந்தைத் தெளிவுடனே சீர்பலவுந் தந்தெமக்கு
விந்தை உலகில் நாம் வாழ வழி செய்திட்டு
வெந்தணலில் வீழ்ந்திறைவன் திருவடியை அடைந்திட்ட
சுந்தரத் தலைவனெங்கள் கதிரவேலு அண்ணல் திருவடிக்கே
பந்தத்தை, பாசத்தை குளைத்தெடுத்து ஓர் மலராக்கி
செந்தமிழ் மணங்கமழ சிறுநூலாய் செதுக்கியதை
தந்தோம் சமர்பணமாய் ஏற்றுடுவீர் நன்றே!






ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் - திருக்குறள்



# திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்

ஓய்வுபெற்ற முன்னாள்
இ.போ.ச தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்

அன்னை மடியில்
15 - 06 -1941

இறைவன் அடியில்
19 - 05 - 2019

## திதிவெண்பா

போற்றலுறு விகாரி வருடம் வைகாசித் திங்கள்
ஐந்தாம் நாள் சீர்பெறும் அபரபட்ச திதியில்
தங்கமகன் சிவகுருநாதன் நித்திய அமைதிவேண்டி
விண்ணுலகு புகுந்தார் விரைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம் அன்புத் தெய்வங்களாயிருந்து
அமரத்துவம் அடைந்த திரு. திருமதி நாகலிங்கம்
தம்பதிகளின் நல்லாசியுடன் திரு. சிவகுருநாதன் அவர்களின்
இந் நினைவு மலரை சமர்ப்பணம் செய்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## Vinayagar Thuthi

Ainthu Karath thanai aanai muhath thanai
Inthin ilampirai pohlum yeitrranai
Nanthi mahan thani gnaanak kolun dhinaip
Punthiyil vaitthadi poattru ghindrane


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராண அடுக்கு

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான் உனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே

# PANSAPURANA ADUKKU

## THEVARAM.

Thodudaya seveijen viday yerior thooveen mathy suddi
Kaddu udaya sudalaip podi pusiyen ullangavar kallvan
Eddudaya malaraan uni nat paninth thetha arul seitha
Pee dudaya pirama puram meviya pemaan ivan andreh.

Kuninth tha puruvamum kovai sevaiyit gumun sirippum
Panit tha sadayum pavalam pool meniyum
Iinitha mudaiya edutha pot pathamum kana pet taal
Manitha piraviyum vaendu vathae in the maani lathey.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்தி நெறி அறிவித்துப் பழ வினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவார் யார் பெறுவார் அச்சோவே

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விழைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## THIRUVAASAGAM.

Muthi neeri ariatha Moorkarodu muyal veenai
Pakthi neeri arivithu Pala vinaikal paarum vannam
Chiththa malam arivithu Sivamaakki enai aandda
Athan enak karuliya vaar Aar puruvaar acchovey

Ammiye appa Oppila maniye
Anpinil villayntha Aaramuthey
Poimy ye perukki Polithinich churukkum
Puluth thali Pulayaneen thana kuch
Semmay ye aaya Sivaptham aliththa
Selvamey Siva peru maaney
Immay ye Unai Chickkena pidithaen
Engelun Tharuluva Thiniyee


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## THIRUVESAIPPA

Katravar vilankum katpaga kaniyai
karaiyilak karunai maa kadalai
matravar arija manikka malaijai
mathippavar mana mani vilakkai
setravar purankal setra em sivanai
thiruveeli milalai veetruruntha
kotravan thannai kandu kandullam
kulera en kankal kulirnthanavee.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி எத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழல் ஒலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரில்
மழவிடை யார்க்கு வழி வழி ஆளாய்
மணம் செய் குடி பிறந்த
பழவடி யாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# THIRUPALLAANDU.

Paalukku Paalagan Veendy Aluthida
Paart Kadal Eentha Piraan
Maalukku Shakkarm Antraul Seythavan
Manniya Thilai Thannull
Aalikkum Anthanar Vaalkinra
Sitam Palamay Ida maaka
Paalithu Naddam Payila Vallanukke
Pallandu kuruithumey.

Kulal Oli Yarl Oli kuthu Oli Eath Oli
Engum Kulaam Perugi
Villal Oli Vinaalalayum Sentru Vimmi
Migu Thiru Vaaruril
Mala Vidai Yaarkku Valli Valli Aalaai
Manaam Sei Kudi Pirantha
Pala vadi yaarodum Kuudi Emmaanuke
Pallandu Kuruthu mey.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சி மாவடிவை குஞ்செவ்வேள் மலரடி போற்றி அண்ணான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம் படி வாழ்த்தி வணங்குவாம்

# THIRUPURAANAM.

Moviru mugangal Potri Mugam Poli Karunai Potti
Aey varum Thuthika Nintra Eeraaru Thoal Potti
Kanchi Mavadi Vaykam Seveel Malaradi Potti Annaan
Sevalum Maylium Potti Thiruk kai Veel Potti

Ulaa Kellaam Unarnthu Oothu That Kariyavan
Nilavu Laavian Neer veeli veenian
Alakil Soothian Ampalth Thaadu Vaan
Malar Silam Padi Vaal thi Vanag Guvaan.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

ஏறு மயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞான மொழி பேசு முகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறு படு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறு முக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

# THIRUPPUGAL

Earu Mayil Eari Villai Yaadu Mugam Ontrey
Easa Nudan Gana Moli Pesu Mugam Ontrey
Kuru Madi Yaarkal Vinai Theerk Kumugam Ontrey
Kunrudo Vaa Veel Vaangi Ninra Mugam Ontrey
Maaru Padu Suurani Vaathi the Mugam Ontrey
Valliye Manam Puriya Vanntha Mugam Ontrey
Aaru Mugam Aana Poruo Nee Arul Veendum
Aathi Arunaasalm Amarntha Perumaaley.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்கள்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டுமென்றே அறி வாரில்லையே!

நெருப்பான மேனியர் செங்காட்டில் ஆத்தி நிழல் அருகே
இருப்பார் திருவுளம் எப்படி யோஇன்னம் என்னை அன்னைக்
கருப்பா சயக்குழிக்கே தள்ளு மோகண்ணன் காணரிய
திருப்பாத மேதரு மோதெரி யாது சிவன்செயலே.

முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் அளவும்
அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன் ?

## வாழ்த்து

வான் முகில் வளாது பெய்க மலிவலம் சுரக்க மன்னம்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்ளி மல்ல
மேன்மைகெள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்தம் ஆக்கியதே- எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில்நீங்கா தான் தாள்வாழ்க
கோகலி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Aum
Sivamayam



# THIRUVASAKAM

Thollai inum pravi soolum thalai neeki
Allal aruthu aanantham aakiathey – ellai
Marruva neri yalikum Vathavoor enkone
Thiruvasagam ennum thane.

# SIVAPURANAM

Namachivaya valga Nathan tharl varlga
Immaip poluthum en nencil Neengathan thaal Varlga
Kokali aanda Kurunani then thaal varlga
Akkamam aaki ninru, Annippan thaal vaalga
Ekan anekan Iraivan adi varlga

Vekam keduth thaanda Venthan adi velga
Pirapparakum pinjakan then Peykalakal velga
Purath tharkuch seyon then poonkalagal velga
Karaguvivar ul magilum koan kalagal velga
Siran guvivar omgu vikkum seerohn kalal velga

Eesan adi portti Enthai adi portti
Thesan adi portti Sivan sevadi portti
Neyathe nindra Nimalan adi portti
Maya pirapparukum Mannan adi portti
Seerar perunthuri nam Thevan adi portti


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமா னனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமாளே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Aaratha impam Arulum malai portti
Sivan avav en sinthaiyur ninra athanaal
Avan arulale avan tharl vananki
Sinthai Mahilach Sivapuranam thannai
Munthai vinai muluthum oya uraippan yan

Kannuthalaan than karunai kann kaatta vantheithi
Ennuthatku edda elilar lalal iranchi
Vinnira inthu man nirainthu mikai vilanglyai
Ennitanthellai ilathtney nin peruncheer
Polla vinaiyane Pugalumaru onrraiyane

Pull aahi Poodai pulavai maramaahi
Pal virugam aahi paravayai pampahi
Kallai manitharai peyai kanangalai
Val asurar aahi munivaraui thevarai
Sella ninra ith thavara sangamathu

Ellap pirappum piranth ilathane emperumaan
Meiya unn ponnadigal kandu inru veedutaen
Uya enn ullaththu Om garanai ninra
Meiya vimala vidai paga vethangal
Aya' ena ongi ainthu akndru nunnianae

Veyai thaniyai Iyamaana naam vimala
Poyayaina ellam Poyagala vantharuli
Meyjananam aahi Milir kinrai miechudaray
En jnanam illathane inpap perumaney
An jnanam thannai akklvikum nal arivey


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருள்வாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார முதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aakkam alavu iriuthi illai anaithulakum
Aakuvai kaapai alippai arul tharuvai
Porkkuvai ennai pukuvippai nin tholepin
Naattrathin neriai seyai naniane
Matram manam kalia ninra marayoney

Karantha paal kannalodu nei Kalanthat pola
Siranth adiyar sinthanaiyul tenoori ninru
Pirantha pirappaukum engal perumaan
Nirangal ore eyenthu udayai vinnorgal eththa
Marainth irunthai emperuman vulvinai eththa

Marainthida moodia maya irulai
Aram paavam ennum arung kaitral kattip
Puran thol Porthu engum pulu aluku moodi
Malam sorum onpathu vayi kudilai
Malankap pulan eyenthum vanjanaiyai seya

Vilanku manaththal vimala unaku
Kalanthu anpakik kasinthu ul urugum
Nalanthan ilatha siriyetku nalki
Nalanthaan male vantharuli neer kalzalkal kaatti
Nayit kadiyaik kidantha adiyetkuth

Thayit siratha thayavana thtthuvaneh
Maasatra sothy Malarntha malar sudareh
Thesaneh thaenar amuthey siva puraneh
Pasamaam pattarthup paaikum aariyaneh
Nesa arul purinthu nenchil vanchang kedap


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றானா உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Perathu ninra perung karunaip peraray
Aara amuthey alavilaap pemmaneh
Orathar ullathul olikum oliyaney
Neerai urukien aaruyirai nindraneh
Impamum thun pamum illaneh ullaneeh

Anparuku anpaneh yavaiyumai allayummaam
Sothiyaneh thum iruleh thonraap perumayaneh
Athiyaneh  antham Naduvaki allaneh
Eertthennai artkonda enthai permaaneh
Koora menjanathal  kunduar vaar thangkaruthin

Nokaria nokeh nunkaria nunnunarveh
Pokum varavum punarvum ilap punnaineh
Kakum em kavalaneh kaan paria per oliye
Aatinpa vellameh Aththmickai nindra
Thottach sudar oliyai sollatha nunnunarvai

Mattara maam vyakathin vevereh vantharivaam
Thetaneh thetah theliveh en sinthanaiyul
Oorttana unnar amuthey udiyaneh
Vetru vigara vidakudampin udkidappa
Aatane em aya aranehyoh enrenru

Portrip Pugaln thirunthu Poi kettu meyanar
Meetingu vanthu vinaip piravi saarameh
Kallap pula kurambai kaddalika vallaneh
Nal irulil naddam pyinradum naathaneh
Thillayul koothaneh Then paandi naattaneh


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aliai piravi aruppaaneh oh' enru
Sollatku ariaanai solli thiruvadikeel
Sollia pattin porul unarnthu solluvar
Selvar sivapurathin ullar sivan adikeel
Pallorum Ethap paninthu 95

Thiruchittampalam




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போக்குச் செல்வம் பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஸ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

சஸ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண் கிணி யாட


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் என்னைக் காக்க என்று உவந்து
வர வர வேலா யுதனார் வருக !
வருக ! வருக! மயிலோன் வருக!
இந்திரன் வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா! வருக! வருக!
நேச குறமகள் நினைவோன்! வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக!
நீறு இடும் வேலவன் நித்தம் வருக!
சிவகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரஹண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச, ரரரர ரரர
ரிஹண பவச,ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ,வீரா நமோ நம!
நிபவ சரஹண நிற நிற நிர்றென
வசர ஹணப வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா! வருக!
என்னை ஆளும் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து என்னை காக்க வேலோன் வருக !
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்,
உய்யொளி சௌவும், உயர் ஐயுங் கிலியும்,
கிலியுஞ் சௌவும், கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் ரீயும் தனி ஒளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக !
ஆறு முகமும், அணிமுடி ஆறும்
நிறு இடு நெற்றியும். நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும், பவளச் செவ்வாய்யும்,
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறு இரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூஷணமும் , பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும், முத்து அணி மார்பும்
செப்பு அழகு உடைய திருவயிறு உந்தியும்,
துவண்டா முருங்கில் சுடரொளிப் பட்டும்,
நவரத்னம் பதித்த நல்சீ ராவும்,
இருதொடை அழகும், இணம் முழந் தாளும்,
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொககென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு, டிகுகுண டிகுண
ரரரர ரரரர,ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி,ரிரிரி
டுடுடு டுடுடு,டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு, டங்கு டிங்குகு
விந்து விந்து, மயிலோன் விந்து
முந்து முந்து,முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ !
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று,
உந்திரு வடியை உருதியென்று எண்ணும்
எந்தலை வைத்து உன் இணையடி காக்க!
என் உயிர்க்கு இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவெல் காக்க!
முப்பத்து இருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என் இளங் கழுத்தை இனிய வேல் காக்க!
மார்பை இரத்ந வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழு பதினாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாண் ஆம் கயிற்றை நவ்வேல் காக்க!
ஆண் பெண்குறிகளை அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைகால், முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் காக்க!
நாவில் , சரஸ்வதி நல்துணை யாக,
நாபிக் கமலம், நவ்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரை இருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில், சாமத்தில், எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க!
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட,
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம், வலாஷ்டிகப் பேய்கள்,
அல்லல் படுதும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளை பேய்களும்,
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட!
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும், இருட்டிலும், எதிர்ப்படும் அண்ணரும்,
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்,
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும், சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட,
ஆனை அடியினில், அரும்பா வைகளும்
பூனை மயிரும், பிள்ளைகல் என்பும்,
நகமும், மயிரும், நீள் முடி மண்டையும்
பாவைகள் உடனே, பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்,
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்,
காசும், பணமும், காவுடன் சோறும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதும் அஞ்சனமும், ஒரு வழிப் போக்கும்,
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட,
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட,
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட,
ஆஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட,
வாய்விட்டு அலறி, மதிகெட்டு ஓட,
படியினில் முட்டப், பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி உருட்டு, கால்கை முறியக்
கட்டு கட்டு, கதறிடக் கட்டு!
முட்டு முட்டு, முழிகள் பிதுங்கிட்
செக்கு செக்கு செதில் செதிலாக்
சொக்குச் சொக்குச் சூர்ப்பகைச் சொக்குச்
குத்துக் குத்து கூர்வடி வேலால்
பற்றுப் பற்று பகலவன் தணல் ஏரி
தணல் ஏரி தணல் ஏரி, தணல் அது ஆக்
விடுவிடு வேலை, வெருண்டது ஓட்
புலியும் , நரியும், புன்னரி நாயும்
எலியும் , கரடியும், இனித்தொடர்ந்து ஓடத்,
தேளும், பாம்பும், செய்யான் பூரான்,
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க,
ஒளிப்பும் சுளுக்கும், ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சுலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல் விப்புருதி
பகக்ப் பிளவை, படர் தொடை வாழை,
கடுவன் , படுவன், கைதாள் சிலந்தி,
பற்குத்து , அரணை, பரு அரையாப்பும்,
எல்லாப் பிணியும், ஏன்றனை கண்டல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாது ஓட, நீ எனக்கு அருள்வாய்!
ஈரேழ் உலகமும், எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா,
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்,
உன்னைத் துதிக்க, உன் திருநமம்
சரஹணை பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவன் ஒழி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா ! குகனே! கதிர் வேளவனே!
கார்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை,
இடும்பனை அழித்த இனியவேள் முருகா
தணிகாசலனே ! சங்கரன் புதல்வா!
கதிர் காமத் உறை கதிர்வேள் முருகா,
பழநி பதிவாழ் பால குமாரா!
அவினனகுடி வாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே!
காரார் குழலாள் கலைமகள், நன்றாய்
என்நா இருக்க, யான் உனைப் பாட,
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன், பரவசம் ஆக்
ஆடினேன் நாடினேன் அவினேன் பூதியை
நேசமுடம் யான் நெற்றியில் அணியப்,
பாச வினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே, உன் அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக, வேலா யுதனார்
சித்திபெற்று, அடியேன் சிறப்புடன் வாழ்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்,
எத்தனை அடியென் எத்தனை செய்தால்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன் கடன்:
பெற்றவள் குறமகள், பெற்றவளாமே!
பிள்ளை யென்று, அன்பாய்ப் பிரியம் அளித்து,
மைந்தன் என்மீது, உன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்ற அடியார் தழைத்திட அருள்செய்!
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயேன் பகர்ந்ததைக்
கலையில் மாலையில் கருத்துடன், நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி,
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்,
ஒரு நாள் முப்பத்து ஆறு உருக் கொண்டு,
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய,
அஷ்டதிக்கும் உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல் எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்து அடி
அறிந்து, எனது உள்ளம், அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவு ஆகச்
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்,
இருபத் தேழ்வர்க்கும்,உவந்து அமுது அளிந்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்து ஆட்கொள, என்றனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே, இடும்பா போற்றி!
கட்மபா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கி கனக சபைக்கும் ஓர் போற்றி!
மயில் நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்,
சரணம் சரணம் சண்முக சரணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க, ஒழித்தான் பித்தாக,
உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருள்சுவை சொற்சுவை
தோய்தர, நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய்
பங்கய ஆசனத்தில்
கூடும் பசும்பொன் கொடியே!
கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்து, உன் அருள் கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடும் கொலோ?
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு,
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும், சொல்சுவை தோய்
வாக்கும், பெருகப் பணித்து அருள்வாய்
வட நூற்கடலும்,
தேக்கும், செந்தமிழ்ச் செல்வமும்,
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

பஞ்சு அப்பி இதம்தரு செய்யபொன்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே?
நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்
நாவும், அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு! ஒத்து இருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும், பரதமும், கல்வியும்
தீஞ்சொல் பனுவலும், யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்த நல்காய்
எழுதா மறையும்,
விண்ணும், புவியும், புனலும்,
கனலும், கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும், பொருளும், பொருளால்
பொருந்தும் பயனும், என்பதால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே!

சொல்விற்பனமும், அவதானமும்,
கவி சொல்லவல்ல
நல்வித்தையும், தந்து அடிமைகொள்வாய்,
நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலம் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரச அன்னம் நாண, நடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி துதி

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக்கொழிக்குங் கலிவாணர்நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணைசெய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளத்தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் - வெள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள் - வெள்ளை

## அபிராமி அந்தாதி

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவி பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம் தரும் கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை,
அண்டம் எல்லாம் பூத்தாளை,
மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்காக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும்,
கரும்பும், அங்கை சேர்த்தாளை,
முக்கண்ணியைத் தொழுவார்க்கு
ஒரு தீங்கு இல்லையே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வெட்டு எதற்காக?



ஒருவர் எங்களோடு இருக்கின்ற போது அவர் எங்களோடு இருக்கின்றார் என்ற திருப்தியோடு இருக்கின்றோம். அவர் நோய்வாய்ப்பட்டு விட்டால் அவர் நோய்வாய்ப் பட்டாலும் எங்களோடு இருக்கின்றார் என்ற திருப்தியோடு இருக்கின்றோம். காலத்தால் அவர் அமரத்துவம் அடைய நேர்ந்துவிட்டால் அவர் அமரத்துவம் அடைந்தாலும் அவருடைய பொன்னுடல் எங்களோடு இருக்கின்றது என்ற திருப்தியோடு இருக்கின்றோம். பொன்னுடலையும் தகனம் செய்ய நேர்ந்து விட்டால் அவருடைய அஸ்தி எங்களோடு இருக்கின்றது என்ற திருப்தியோடு இருக்கின்றோம். அஸ்தியையும் வீட்டுக்கிருத்தியம், அந்தியேட்டி என்று சொல்லப்படும் கிரியைகளின் மூலம் இல்லாமல் செய்து விட்டால் எங்களிடம் எஞ்சியிருப்பது அவருடைய நினைவுகளைச் சுமந்து வருகின்ற நினைவு மலர் என்று சொல்லப்படுகின்ற கல்வெட்டேயாகும். அது மற்றவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்றதோ இல்லையோ என்பதைவிட சம்பந்தப்பட்டவர்களுக்கு அவருடைய இழந்துபோன ஸ்தானத்தை நிரப்பிக் கொடுக்கின்ற மிகப்பெரிய சாதனமாக இக்கல்வெட்டு என்பது இருக்கிறது என்பதே உண்மையாகும்.

கல்வெட்டு என்றால் அழியாமல் இருப்பது என்பதே பொருளாகும். எனவே நாங்கள் மறைந்து போனாலும் என்றும் மறையாமல் இருந்து இனிவருங்காலத்தவர்களுக்கும் ஒரு பரம்பரையின் வரலாற்றைக் கூறுகின்ற ஒரு ஆவணப் புத்தகமாகவும் இது அமைகின்றது. எனவே வாழ்ந்தவர்களுடைய வரலாறானது வாழ்பவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்பதால் சம்பந்தப்பட்டவர்கள் மாத்திரமின்றி எல்லோரும் அமரத்துவம் அடைந்து போன ஒருவர் பற்றிக் கூறுகின்ற இக்கல்வெட்டிற்கு மதிப்பளித்துப் படித்துப் பாதுகாத்து இறைபதம் அடைந்த நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்களின் நல்லாசிகளைப் பெறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாட்டின். யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் காலஞ்சென்ற நாகலிங்கம் இராசம்மா தம்பதியினரின் மூன்றாவது பிள்ளையாக 15-06-1941ல் பிறந்தவர் அமரர் நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்கள். இவருடைய மூத்த சகோதரி நீலயதாட்சி, மூத்த சகோதரன் சண்முகலிங்கம், இளைய சகோதரன் தியாகராசா, ஆகியோர்களை இளைய சகோதரன் தியாகராசா பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தபோது திடீர் மாரடைப்பு காரணமாக 15 - 01 - 2001 ம் திகதி காலமானார்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை மரியமுத்துவின் மகள் புஸ்பராணி அவர்களை 22-08-1964ம் திகதி திருமணம் செய்தார். காதல் திருமணம் என்பதால் பல எதிர்ப்புகள் எழுந்தன என்றும் தனது மைத்துனர் தற்போது ஜெர்மனியில் வசித்துக்கொண்டிருக்கும் புண்ணியமூர்த்தி தனது காதல் திருமணத்திற்கு உறுதுணையாக இருந்ததாகவும் சொல்லிக்கொள்பவர்.

திருமணத்தின் மூலம் மூன்று பிள்ளைகள் - பாலமுரளி (பாலா) பாலதர்சினி (தர்சினி), பாலச்சந்திரன் (சந்திரன்) பெற்று பண்புடைய பிள்ளைகளாக வளர்த்தவர். அவர்களுக்கு முறையே சறோஜினி, தவராசா (செல்வன்), பவானி ஆகிய முத்தான மூன்று மருமக்களையும் பெற்று அவர்களுக்கு நல்லபடியாக திருமணம் செய்து தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளை சிறப்பாகச் செய்தவர். சரண், சாருகன், கிரிசன், பவிசன், சிவராஜி, விஸ்ணு ஆகிய ஆறு பேரப்பிள்ளைகளுடன் அன்பான பேரனாகப் பழகி இன்பமாக வாழ்ந்தவர். இலங்கைப்போக்குவரத்துச் சபையின் "தொழில்நுட்ப உத்தியோராக கிளிநொச்சியில் கடமையாற்றிய காலத்தில் இ.போ. சபை இவரது சேவை அர்ப்பணிப்பை பாராட்டி கௌரவித்திருந்தது. அக்காலத்தில் கிளிநொச்சி டிப்போவுக்கு தரமான பஸ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பள்ளமும் குழியுமாக காட்சிதரும் தெருக்களில் அடிக்கடி பஸ்வண்டிகள் நின்றுவிடும். அப்போதெல்லாம் கிளிநொச்சி டிப்போவிலிருந்த தொழில் நுட்பவியலாளர்கள் வரவழைக்கப்பட்டு திருத்தச் செய்து கொள்வார்கள். கடமையுணர்வும் மனிதாபிமான பண்பாரும் மிக்க சிவகுருநாதன் அவர்கள் இரவு பகல் என்று பாராமல் பொதுமக்களின்மேல் கொண்ட அக்கறை காரணமாக நேரகாலம் பாராமல் உழைத்தவர்.

இவரது தொழில்நுட்பத்திறமை காரணமாக 1983ல் பிரான்ஸ் நாட்டுக்கு புலம்பெயர்ந்து வந்தபோது Volkswagen கார் கம்பனியில் வேலை கிடைத்தது என்பது இவரது திறமைக்கு கிடைத்த அங்கீகாரம் என்றே சொல்லாம். இவரது திறமையைக்கண்ட பிரான்ஸ் நாட்டு நிறுவனம் இவரது தம்பி தியாகராசவையும் தொழில் நுட்பவியலாளாராக நியமனம் செய்தது. தனது மனைவி பிள்ளைகளை கனடா நாட்டுக்கு வரவழைக்க விரும்பிய சிவகுருநாதன் அவர்கள் 1986ல் கனடாவுக்கு புலம்பெயர்ந்தார். மூன்று ஆண்டுகளில் மனைவியும் பிள்ளைகளும் இவருடன் இணைந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவிலும் இவரின் தொழில் திறமைகளைக் காட்டினார். தனது மூத்த மகன் பாலமுரளியையும் இத்துறையில் பயிற்றுவித்தார். தற்போது கனடா மிசிசாக நகரில் பெயர்பெற்ற தொழில்நுட்பவியலாளராக S.B.S. Auto Motive என்ற நிறுவனத்தின் சொந்தக்காராக திகழ்கிறார்.

கனடா றொறன்ரோ நகரைப் பொறுத்தமட்டில் பல பகுதிகளில் சைவ ஆலயங்கள் நிறைய உண்டு. ஆனால் மிசிசாக பகுதியில் ஆலயம் இருக்கவில்லை. இங்கு ஒரு ஆலயம் அமைக்கவேண்டும் என்று ஒன்றுபட்டவர்களில் மிக முக்கியமானவர் திரு.சிவகுருநாதன் அவர்கள். மிசிசாகா இந்து மகாசபை என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை அமைத்து ஜெயதுர்க்கா என்ற ஆலயத்தை இங்கு நிறுவ உழைத்தவர்களில் முக்கிய பங்கு சிவகுருநாதனுக்கு உண்டு. இவ்வாலயத்தின் முதலாவது பரிபாலன சபையின் தலைவராகப் பொறுபேற்ற பெருமை இவருக்கு உரியது. ஆலயத்துக்கென சொந்தமாக நிலம் வாங்கவேண்டும் என்ற முயற்சியிலும் இவர் வெற்றி கண்டவர். தற்போது ஆலயத்துக்கென்று சொந்த நிலம் இருக்கிறது.

சகலருடனும், பண்புடன் அன்புடன் பேசும் பழக்கம் இவருடன் கூடவே பிறந்தது எனலாம். மிசிசாகா இந்து மகாசபை இவரது மரணத்தையிட்டு வெளியிட்ட அஞ்சலி பிரசுரத்தில் இவரது குணாதிசயங்களை அப்படியே கோடிட்டு பதிவு செய்துள்ளது. முன்பின் முகமறியா மனிதனையும் முகம்மலர கரம் கொடுத்து உபசரிக்கும் பண்பாளன். அப்பன் என்றும் தம்பி என்றும், அம்மா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, பெற்றோறேரை என்றும் எப்போதும் சிரித்த முகத்துடன் காட்சி தரும் மாமனிதன் என்று பலராலும் புகழ்ப்பட்ட சிவகுருநாதன் அவர்கள் தற்போது பூலகில் இல்லை.

மூன்று தினங்கள் மட்டுமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவரது உயிர் 19-05-2019 அன்று பிரிந்தது - 15-06-2019 பிறந்தநாளைக் கொண்டாட 26நாட்கள் மட்டுமே இருந்த நிலையில் அவர் இறைவனடி சேர்ந்தார்.

சிவகுருநாதன் அவர்கள் எல்லோர் மனதிலும் இடம்பிடித்த ஓர் உத்தமர் - அவரின் பிரிவை மறக்க முடியாத நெஞ்சங்கள் இன்றும் அழுகின்றன. இவரின் வாழ்க்கை நிறைவான வாழ்வாக இருந்தாலும் விதி வழி சென்று இறைநிலை பெற்றது என்றே எண்ணி சாந்தியடைவோமாக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே சென்றீர்கள் என் கண் மணியே!

என் தெய்வமே! என்னைத் தனியாய் தவிக்கவிட்டு எங்கே சென்றீர்கள் என் கண் மணியே! பப்பா பப்பா என்று நான் அழைக்க, அம்மா, அம்மா நீங்கள் அழைப்பதை எப்போது இனிக்கேட்பேன்.

காதலித்து திருமணம் செய்தோம். அதே காதலுடன் இணைபிரியா தம்பதியினராய் கடைசிவரை வாழ்ந்தோம். தனித்து நாம் பிரயாணம் செய்ததில்லை. இப்போது என்னைத் தனியாக விட்டுச் சென்றது ஏனோ நானறியேன்! நாம் பெற்றெடுத்த பிள்ளைகளும், பிள்ளைகளுக்கு வந்து சேர்ந்த மருமக்களும், பேரப்பிள்ளைகளும் உங்கள் பிரிவைத்தாங்க முடியாமல் கதறியழும் சப்தம் கேட்கிறதா உங்களுக்கு?

கடைசிக் காலத்தில் நாம் வாழ்ந்த மண்ணில் வாழ்ந்து மடியவேண்டும் என்று விடாப்பிடியாய் நின்று அங்கே வீடொன்றைக் கட்டி முடிப்பதில் நீங்கள் காட்டிய அக்கறையை நான் அறிவேன். வேலையில் சற்று சோர்வடைவதை கண்டு உங்கள் உடல் நிலை பற்றிக் கேட்கும் போதெல்லாம் ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று சொல்லிச் சொல்லி வேலைகளைத் தொடர்ந்தீர்கள் உங்கள் பிறந்த நாள் 15.06.2019க்கு பின் வீட்டு கிரகபிரவேசத்தை நடத்திவிட்டு, கனடா திரும்பி பிள்ளைகளுடன் பிறந்த நாளைக் கொண்டாடி விட்டு எஞ்சியிருந்த வீட்டு வேலைகளை முடிப்போம் என்று திட்டமிட்டிருந்த வேளையில் இப்படியொரு சோகம் நடக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யாரறிவர்? ஆண்டவன் செய்த இக்காரியம் நியாயமாகுமா? பிறப்பவர் இறப்பது நிஜம் என்றாலும். சாதாரண காய்ச்சலுடன் மூன்று நாட்களுக்குள் உங்களைச் சாகடிப்பது எப்படி நியாயமாகும் கடவுளே!

நமது வாழ்க்கை எப்படி ஆரம்பிக்கப்பட்டது கடைசிவரை எப்படி எப்படி எல்லாம் வாழ்ந்தோம் என்ற பதிவு ஒன்றையும் வீடீயோ காணொளி மூலம் எனது 75-வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது வெளிப்படுத்தியதும் இதற்காகத் தானோ? உங்களை இறுதியாக வழியனுப்பிவைக்கும் இறுதி கிரியை நிகழ்வின்போது உங்களின் இந்தக் குரலை மண்டபத்தில் ஒலிக்கச் செய்து நமது வாழ்க்கையை படம் பிடித்துக்காட்டினார்கள் நாம் பெற்றெடுத்த பிள்ளைகள்.

நான் வைத்திய சாலைக்கு வந்தபோது நீங்கள் இறந்துவிட்டீர்கள் என்பதை அறியாமல் நெற்றியில் திருநீறு பூசிய கைகள், தற்போது அதை நினைத்து இயங்க மறுக்கிறது. நடைப்பிணமாய், பைத்தியக் காரிபோல் நடமாடு என்று இப்படியொரு தண்டனையை எனக்கு ஏன் தந்தீர்கள்? நீங்கள் நிம்மதியாய் தூங்குகிறீர்கள். நான் இங்கே... தனிமையில் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கிறேன். இதைவிட நான் வேறென்ன சொல்லமுடியும். என் பப்பா! உங்கள் பிரிவால் துடிதுடிக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும் மனதைச் சாந்தப்படுத்தும் சக்தியை பெற்றுக்கொடுங்கள் என்று மட்டும் மன்றாடுகிறேன்.

உங்கள் பிரிவால் வாடும்
*மனைவி புஷ்பராணி (கிளி)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்பான என் பப்பாவிற்கு....

பப்பா! எப்படி இந்ததுயர் பகிர்வு செய்தியை எழுதுவதென்று புரியவில்லை பப்பா! கனக புரத்தில் வீடு கட்டும் யோசனையை நீங்கள் என்னிடம் கூறியபோது அதற்கு சம்மதம் தரமறுத்த கொடூரன் நான். உங்கள் கருத்துகளுக்கு என்றுமே மறுப்புச் சொல்லாத நான் இதற்கு மட்டும் விடாப்பிடியாய் வேண்டாம் என்றேன். ஒரு வேலையை ஆரம்பித்தால் அதை முற்று முழுதாக செய்து முடிப்பதில் நீங்கள் எப்படி ஈடுபடுவீர்கள் என்று எனக்குத் தெரியும். சில மாதங்களுக்கு முன்னர் தான் இருதயநோய் கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வேலை உங்களுக்கு உகந்தது இல்லை என்று நினைத்து இதற்கு சம்மதிக்கவில்லை. நிச்சயம் என் மீது கோபப்பட்டிருப்பீர்கள். ஆனால் விதி என்பது யாரைத்தான் விட்டுவைக்கிறது. வாழ்ந்த மண்ணில் கடைசிக்காலம் வாழ்ந்து மடிய வேண்டும் என்று விரும்பினீர்கள். அப்படியே அது நிறைவேறிவிட்டது என்ற காரணம் மட்டுமே எங்களது மனதைச் சாந்திப்படுத்துகிறது.

எங்களை வளர்த்தெடுப்பதில் எங்கள் பப்பா காட்டிய அக்கறை, எங்களை வெளிநாட்டுக்கு எடுப்பிக்க ஓடோடி உழைத்த எங்கள் பப்பா, கனடாவில் வாழும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தொகையான நண்பர்களை தேடிக்கொண்ட பப்பா தெய்வபக்தியுள்ள பப்பா நேர்மைக்குத்தலை வணங்கும் பப்பா உறவிணர்களை தேடித்தேடி உதவும் பப்பா, என்ற பெருமையும் உங்களுக்கு உண்டு. நீங்கள் மறைந்தாலும் உங்கள் பெருமையைப் பேச இங்கு பலர் இருக்கிறார்கள். நிம்மதியாய் தூங்குங்கள். எங்களை யார் தேற்றினாலும் இது சாத்தியமாகுமா பப்பா!

ஆறாத்துயரத்தில் வாடும்
*உங்கள் மூத்த மகள் பாலமுரளி.*
*மருமகள் சரோஜினி*
*பேரப்பிள்ளைகள் சரண், சாருகன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பப்பா பப்பா என்றுதான் ஒலிக்கிறது...

பப்பா! எங்கள் வீடுகளில் தற்போது ஒலித்துக் கொண்டிருக்கும் சப்தம் பப்பா – பப்பா – தாத்தா – தாத்தா என்பது தான்! இது உங்களுக்கு எப்படிக் கேட்கப்போகிறது? ஆனால் உங்கள் அகக்கண்ணால் நாங்கள் படும் துன்பத்தை நிச்சயம் பார்த்துக்கொண்டிருப்பீர்கள் என்பது எனது நம்பிக்கை! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்களது ஆசி என்றும் எங்களுக்கு கிட்டும், கிட்ட வேண்டும்.

எங்களை எப்படி வளர்த்தீர்கள் என்பது நாம் அறிவோம் செல்லப் பிள்ளைகளாய் எங்களை வளர்த்தீர்கள். எங்களுக்கு திருமணம் செய்து வைத்தாலும் எங்களை மறக்காமல் ஓடோடி வருவீர்கள். எங்கள் அம்மாவையும், உங்கள் ஆசைப்பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் குறிப்பாக உங்கள் மருமகன் செல்வனையும் விட்டுப்பிரியவே ஆண்டவன் செய்த சூழ்ச்சி இது.

என் கணவன் செல்வன் உங்களை என்றுமே மாமா என்று அழைத்தது கிடையாது. எங்களுக்கு எப்படி பப்பாவோ அவர்க்கும் நீங்கள் பப்பாவாகவே இருந்தீர்கள். செல்வனின் அப்பா – எனது மாமா ராஜரத்தினம் அவர்கள் கூட உங்களை "பப்பா" என்று தான் அழைப்பார். ஏன் என் கணவர் செல்வனின் அண்ணா ரஞ்சன் அவர்கள் கூட உங்களைப் பப்பா என்று தான் அழைப்பார். இவர்கள் மட்டுமா இவர்களது சகோதரிகளின் பிள்ளைகளுக்குக் கூட நீங்கள் பப்பா. என் கணவரின் குடும்பத்தார் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பா என்று அழைப்பதை விட மதிப்பும் மரியாதையும் அன்பும் வைத்திருந்தார்கள். உங்கள் மரணச் செய்தி அவர்களை வாட்டியது. இறுதி கிரியைவரை இவர்கள் தூக்கமின்றி நிம்மதியிழந்து தவித்தனர். இவை எல்லாம் நீங்கள் எங்களுக்குத் தேடித்தந்த பெருமை.

எங்களைப் பொறுத்தமட்டில் எங்கள் பப்பா ஒரு தெய்வம் அம்மாவை மட்டும் எப்படித் தேற்றிக் கொள்வதென்று தெரியவில்லை. நீங்கள் தான் அவருக்குத் தெய்வம் அவர் சுயமாக தனித்து இயங்கியதை நாம் கண்டதில்லை. இணைபிரியாத தம்பதியினராய் இப்பூவுலகில் நடமாடினீர்கள். சமூகத்தொண்டு, சிவத்தொண்டு ஆற்றினீர்கள். உறவினர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அவர்களுக்கு உதவுவதில் முன்னின்றீர்கள். உறவினர்கள் பலரை வெளிநாடு வர உதவினீர்கள். உதவி செய்யும் மனப்பாங்குள்ள எங்கள் பப்பா இப்போது எங்கள் மத்தியில் இல்லையே என்ற ஆறாத்துயரத்தில் தேங்கித்தேங்கி அழுகின்றோம்.

பூவுலகில் இருந்தபடி எங்களை ஆசிர்வதியுங்கள் நிம்மதியாயத் தூங்க...

உங்கள் பிரிவால்வாடும்

**மகள் தர்சினி (சிறி)**

**மருமகன் செல்வன் – தவராசா**

**பேரப்பிள்ளைகள் கிர்சன், அபிசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசைப் பப்பாவே!

பப்பா!

நாட்டுப்பற்றாளனாய் பிறந்த மண்ணின் விசுவாசியாய் வாழவேண்டும் என்ற உங்கள் ஆசை என்னையும் கவர்ந்தது. கடைசிக் காலத்தில் நாம் வாழ்ந்த கனகபுரம் மண்ணில் வீடுகட்டி நீங்களும், அம்மாவும் வாழ வேண்டும் என்று நீங்கள் விரும்பியதற்கு முதலில் சம்மதித்தவன் நான் தான். அண்ணனும் அக்காவும் உங்களின் இந்த விருப்பத்தை நிறைவேற்றத் தயங்கிய போதும் உங்கள் இருவரின் இந்த ஆசையை செய்து முடிக்க வேண்டும் என்று விடாப்பிடியாய் நின்றவன் நானே! வீட்டு வேலை ஓரளவு முடிந்த நிலையில் கனடா திரும்பிவர ஆயத்தம் செய்யும் போது கொடிய இயமன் இப்படியொரு அநியாயத்தை செய்திடுவான் என்று யாருக்குத் தெரியும் பப்பா!

திடீரென ஏற்பட்ட சோர்வு காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த நோய்க்குரிய மருந்து அங்கில்லாததால் கொழும்பிலிருந்து வந்து கொண்டிருப்பதாகவும் தகவல் கிடைத்ததும் கனடாவிலிருந்து புறப்பட்டு இலங்கைக்கு ஓடிவந்தேன். நான் விமானத்தில் பறந்து கொண்டிருக்கும் போதே உங்கள் உயிர்பிரிந்து விட்டதென்ற செய்தி கொழும்பு விமான நிலையம் வந்தடைந்த போது கிடைத்தது. தாங்குமா என் மனசு அதேயிடத்தில் உருண்டு பிரண்டேன். என்னை எப்படித் தேற்றுவது என் அம்மாவை எப்படித் தேற்றுவது என்ற நிலையில் துடியாயத் துடித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பூதவுடலை கனடாவுக்கு எடுத்துச் செல்லும் வேலைகளை துரிதமாக்க செய்து உங்கள் கைகளில் கனகபுரம் மண்ணையும் வைத்து அனுப்பினேன். உங்கள் கடைசி ஆசை நிறைவேறியது. ஆனால் என் கடைசி ஆசை உங்களுடன் அந்த மண்வரவேண்டும் என்ற ஆசை நிறைவேறவில்லை. பூதவுடலுடன் அந்த மண் அனுமதிக்கப்படவில்லை. கண்கலங்கி அழுவதை விட வேறென்ன செய்ய முடியும், என்னால்!

தந்தை என்ற ஸ்தானத்தைவிட நண்பன் போல் பழகும் எங்கள் பப்பாவை எப்படி நாம் மறப்போம். நாம் வாழும் மிசிசாகா நகரில் சைவ ஆலயம் ஒன்று நிறுவ வேண்டும் என்பதில் நீங்கள் காட்டிய அக்கறையை உங்கள் பிள்ளைகளாகிய நாம் அறிவோம். "ஜெயதுர்க்கா" என்று ஆலயத்துக்குப் பெயரிட்டு அக்கோயிலின் பரிபாலன சபையின் முதலாவது தலைவராக சேவை செய்யும் போது எங்களுக்குப் பெருமை தேடித் தந்துள்ளீர்கள். இக்கோயிலுக்குச் சொந்தமாக நிலம் வாங்கவேண்டும் என்ற முயற்சியில் பரிபாலனசபை ஈடுபட்டவேளையில் வங்கியில் கடன் பெற, சொந்த வீடு வைத்திருக்கும் இரண்டு பேரின் பிணை தேவை என்று வங்கி கூறியபோது அதற்குப்பலர் முன் வராத வேளையில் நான் தருகிறேன் என்று முன் மொழிந்த உங்கள் இறைபக்தியை நாம் இப்போது நினைவு கூர்கிறோம். இக்கோயிலில் உங்களின் பங்களிப்பு என்றும் மறக்கப்படாது என்று நம்புவோம்.

கனடாவில் மட்டுமல்ல நம் நாட்டு மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற உங்களின் மனப்பான்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக, அங்குள்ள பொது நிறுவனங்களுக்கும் நிதிஉதவி செய்து கொடைவள்ளலாய் நீங்கள் இப்பூவுலகில் வாழ்ந்து மடிந்துள்ளது பிள்ளைகளான எங்களுக்கு மகிழ்ச்சியே!

பிறப்பவர் இறப்பது நிஜம் என்ற காரணத்தை முன் வைத்து எங்களது துயரத்தைப் படிப்படியாக தாங்கிக்கொள்ளும் சக்தியை இறைவன் எமக்கு பெற்றுத்தரவேண்டும் என்பதே எங்கள் ஆசை நீங்கள் அமைதியாய் தூங்குங்கள் பப்பா.

உங்கள் பிரிவால் துயருறும்

**மகன் சந்திரன்**

**மனைவி பவானி**

**பேரப்பிள்ளைகள் சிவராஜி, விஸ்ணு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் சகோதரனே...

எங்கள் ஆசைத்தம்பி குருவே
அன்பிற்கே இலக்கணமாய் என்றும்
அக்கா அண்ணா என்றெம்மைக் கொண்டாடிய
உறவே, எமைப்பிரிந்து எங்கேயடா போனாய்
மூத்தவர்கள் நாமிருக்க உமக்கென்ன அவசரமோ
தம்பியின் நினைவோடு சேரத்தான் போனீரோ
அவனோடிணையும் அவசரம்தான் உமக்கோ ஐயா!

இருக்கும் நாமிருவரும் வடக்கிலும்
தெற்கிலுமாய், தனத்தனியே கரைகின்றோம் ஐயா
இனி எப்போதான் நாமொன்றாய் இமணைவோமோ
நீவிர் இருவரும் எம்மைத்தவிக்கவிட
நாங்கள்தான் என்ன பிழை செய்தோமையா
எப்பிறப்பிலும் நாம் காண்போம் இனி
தனிமையில் நாம் புலம்புதலன்றி
வழியொன்றும் அறிகிலோமே ஐயா!

உங்கள் பிரிவால் வாடும்
**அன்புச் சகோதரர்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சித்தப்பா!**

**விழிநீர் வழிகிறது.**

பிள்ளைக்குறும்பும், வெள்ளைச் சிரிப்பும்
இனி என்று காண்போம்.
கனக்கிறது மனம். காணும் வழியறியோம்!
எங்கு சென்றீர் எம்மைவிட்டு!
இறைவன் அடியில் இன்று நீங்கள்!
இறைவன் அழைப்பில் நாளை நாங்கள்

Tribute by
Ravi
Canada


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரு அண்ணர்

குரு அண்ணர் என்றும், எமக்குப் பிந்திய சந்ததியினரால் குருமாமா எண்றும் அழைக்கப்பட்ட என் உடன்பிறவாச் சகோதரன் திரு நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்கள் 15.05.2019 அன்று இப்பூவுலக வாழ்வினை நீத்து விண்ணுலகம் சேர்ந்துவிட்டார்.

கடந்த ஐம்பது வருடங்களுக்குமேல், சகோதரனாகவும், உற்ற நண்பனாகவும், நல்லதோர் குருவாகவும் எனப் பலவிதத்தில் என்னோடு பழகியவர் என்பதனால் அவரைப்பற்றி நன்றாகவே அறிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன்.

1967ம் ஆண்டுக் காலத்தில் முதன்முதல் சாரதிப்பயிற்சியைப் பயிற்றுவித்தவரும், அதேபோன்று ஒரு இயந்திரம் எவ்வாறு இயங்குகின்றது என்ற என் கேள்விக்குப் பதிலாக, மூன்றுநாட்களாக என்னை உதவிக்கு வைத்துக்கொள்ளும் சாட்டில், ஒவ்வொரு உதிரிப்பாகத்தயையும், அதனதன் செயற்பாடுகளையும் எனக்குக் கற்பித்தார். என்னுடைய இருபதாவது வயதிலும் அவருடைய இருபத்தாறாவது வயதிலும் தான் இது நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வயதில் அவரிடம் நான் கண்ட பொறுமையும், எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் கோபமோ பதற்றமோ இன்றி எனக்குச் சொல்லித்தந்த அந்த நாட்களை எண்ணி இன்றும் வியக்கின்றேன். அதுவும் அவரிடம் கற்றுக்கொண்ட பாடமே. அதன்பின் அவ்வாறொருவரை இன்னமும் நான் சந்திக்கவேயில்லை. அவரது பிள்ளைகளுக்கும் அந்தப்பொறுமை வாய்க்கப் பெற்றுள்ளதானது இறைவன் அவருக்களித்த பெரும் பரிசாகும்.

1967ல் கனகபுரத்தில் ஆரம்பித்த எங்கள் உறவு 1988ல் கனடாவில் மிக அருகில் வாழக்கிடைத்தமையால் தொடர்ந்தது. ஆரம்பத்தில் கனடாவில் நான் தனியாக வாழ்ந்த காலத்தில் குருவண்ணரும், அவரது குடும்பத்தவரும் எனக்கு உறுதுணையாயிந்ததனை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

என் குருவண்ணர் என்னைக்கண்டவுடன் இறுகத்தழுவி முத்தமிடாமல் ஒருநாளும் விட்டதில்லை. 19-05-2019 மதியம் நான் வைத்தியசாலையில் பார்க்கப்போன போதுதான் கண்திறக்காதிருந்தார். அந்த அறையில் அவர் படுத்திருந்த கட்டிலருகில் அந்த அறையில் நானும் ஒரு தாதியும் மட்டுமே இருந்தோம். அவர் பேசமுடியாதிருந்தாலும் உணரக்குடியதாயிருக்குமென எண்ணி நான் முத்தமிட்டு, நெற்றி, கை, கால் எனத்தடவி விட்டேன். அதுதான் எமது கடைசிச் சந்திப்பு என நான் உணர்ந்திருக்கவில்லை. ஆனால் இறைவனுக்குத் தெரிந்துதான் அச்சந்தர்ப்பத்தை எனக்களித்தருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றோடு அவருடைய அணைப்பும் முத்தமும் அவரோடேயே போய்விட்டது. என்னைமட்டுமல்ல, அனைவரையும் ஒரேதாயின் பிள்ளைகளாய் அரவணைப்பதில் அவருக்கு நிகர் அவரே. இதனை அவருடன் பழகிய அனைவருமே உணர்ந்திருப்பார்கள். அவரது திருமண வாழ்வின் பல அனுபவங்களை என் திருமணத்தின்போது பொன்முத்துக்களாய் என்னோடு பகிர்ந்து கொண்டார். இன்று வரை கடைப்பிடித்தே வருகின்றேன். என் உணர்வுகள் அடங்கும் வரை, அவரையும், அவர் சார்ந்த நினைவுகளையும் மறக்கமாட்டேன். மறுபிறப்பென ஒன்றிருந்தால், அவரோடு நெருங்கிய உறவாய்ப் பிறக்கவேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

அண்ணி பிள்ளைகளோடும், மற்றும் குடும்பத்தவரோடும் அவர்களது துயரில் பங்கு கொள்வதோடு, என்றும் உங்களோடும் என் உறவு இருக்கும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்".

நன்றி.

**தம்பி கயிலாயநாதன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுருநாதன் நாகலிங்கம் அவர்கட்கு

# கண்ணீர் அஞ்சலி

உருக்குலைந்த மனதோடு
உணர்வு உருகி நிக்கின்றோம்-ஐயா
உம் இறப்பின் சேதி கேட்டு ...

நாம் தடக்கி விழும் பொழுதெல்லாம்
இறுக்கி எமை அணைப்பவனே -நீ
வெறுக்க நாம் என்ன செய்தோம்
இடை நடுவே நீ அகல ...

இப்போ ...
நெஞ்சுருகி நிக்கின்றோம்
நீ இறந்த சேதி உற்று -உன்
கொஞ்சு மொழி கேளாமல்
குமுறுதையா எம் மனது ...

சிரித்த முகத்தழக
சீரிய குணத்தழக
மற்றவர் மனம் நோகா
மாண்பு மிகு சிவ குரு நாதா

இறுக்கமாய் எம்மோடு
நெருக்கமாய் இருந்தவனே
இடுக்கண் வரும் போது
இரு கை கொடுப்பவனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுக்கென நீ சென்ற
விடை தான் நாம் அறியோம்
துடுக்கை இழந்த படகினைப் போல்
துடிக்குதய்யா உன் குடும்பம்

ஊரோடு ஒத்திருந்தது
உயர்வாக நீ வாழ்ந்து
சீரோடும் சிறப்போடும்
நிறைவாக நீர் இருந்து
பார் போற்றும் வகையில்
பதினாறும் தான் பெற்று
பெரு வாழ்வு தான் உற்று
பொது வாழ்வு போதும் என்று
போய் விட்டாய் எமை விட்டு
ஆல மர விரிச்சமதாய்
அன்பு நிழல் தந்தவனே-உயிர்
வேர் அறுத்து நீ சரிந்து - உன்
கிளைகளை ஏன்- கண்ணீரை
உதிர விட்டாய்....!!!!

ஆண்டுகள் உருளட்டும்
அழியட்டும் இவ் உலகு
மாண்டு நீ போனவரே
மீண்டு நீ வரவேண்டி-உம்
ஆத்மா அமைதிக்காய் -இறை
அருள் வேண்டி நிக்கிறோம்

ஓம் சாந்தி !!!! ஓம் சாந்தி !!!! ஓம் சாந்தி !!!!

**கிருபா கந்தையா**
செந்தமிழ் கலாமன்றம் -உருத்திரபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

உள்ளம் நிறைந்த உறவே!
ஊர் போற்ற வாழ்ந்திருந்தாய்...
கள்ளமற்ற பிள்ளைகளை ஈந்தாய்
பார்புகழ வாழ வைத்தாய்
எண்ணிப் பார்க்க இயலவில்லை
கண்ணில் காணா உலகுக்கு
காலனவன் கொண்டு செல்ல – நாம்
பண்ணிய பாவமென்ன?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சுப்பிரமணியம் மீனாட்சி**
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

விழிகள் கரைகிறதே...
வேதனை நெஞ்சை முட்டுகிறதே...
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உம் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே வாய்பேச மறுக்கிறதே
உம் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள் இன்று
கண்ணீரில் மதிப்பதை தவிர்க்க ஒரு கணம்
மீண்டும் கண்திறக்க மாட்டீரோ?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சேவியர் மலர்**
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஆசைப்பபாவிற்கு



உங்களின் திடீர் மறைவுச் செய்தி என்னையும் எம் குடும்பத்தினரையும் ஒரு கணம் நிலைகுலையச் செய்தது. எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும் உங்கள் நினைவு எம்மை விட்டகலாது.

இருந்தாலும், மறைந்தாலும் பெயர் சொல்லவேண்டும்.
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்!
என்று வாழ்ந்தவர் எனது அருமை ஆசையப்பா
இன்று உங்களின் மரணச் செய்தி கேட்டு
கலங்கி நிற்கின்றேன்!
உங்களுடனான நினைவுகள் என்றும் நீங்கா!
உங்களின் ஆத்மாசாந்தியடைய
இறைவனை பிராத்திக்கிறோம்.

என்றும் உங்கள் நினைவில்
அன்பு மகள்
**நீரஜா சிவபாலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

அமரர் நாகலிங்கம் சிவகுருநாதன்
(ஓய்வு பெற்ற முன்னாள் இ.போ.ச தொழில் நுட்ப உத்தியோகத்தர்)
இல-117. கனகபுரம் கிளிநொச்சி

ஆண்டு நூறாகிப் போனாலும்
மாண்டு நீறாகிப் போகாது – நீங்கள் வருவீர்கள்
என்ற கனவும், உம் நினைவும்..

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் இக்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்...

**அமிர்தலிங்கம் குடும்பத்தினர்.**

## துயர் பகிர்கின்றோம்

விழிகள் கரைகிறதே....
வேதனை நெஞ்சை முட்டுகிறதே...
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உங்கள் பிரிவின் துயர்ச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே வாய்பேச மறுக்கிறதே
உங்கள் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள் இன்று
கண்ணீரில் மிதப்பதை தவிர்க்க ஒரு கணம்
மீண்டும் கண்திறக்க மாட்டீரோ?

ஓம் சாந்தி !!!! ஓம் சாந்தி !!!! ஓம் சாந்தி !!!!

**அ. கனகரத்தினம் குடும்பத்தினர்**
கனகபுரம் கிளிநொச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகிறோம்

நித்திரை போவது நியதி என்றால்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்.
இன்பங்கள் சேருமிடத்தில் இன்முகம் காட்டி நின்றீர்.
துன்பங்கள் சேருமிடத்தில் துணிவு காட்டி நின்றீர்
பொது சேவை என்னும் போது
பொக்கிசமாய் சேவை செய்யும்
விடிவுதனை எம் வாழ்வில் விருட்சமாய் வளர்ந்து....
மிடி உற்றார் என்றால் படி தேடி சென்றிடுவீர்...
நாதியற்ற உள்ளத் தேவைதனான தேடி சென்று தீர்த்திடுவீர்
இடி மின்னல் மழை வந்தது போல...
கொடி ஏதும் அசையாமல் புயல் வந்தது போல....
விடை ஏதும் சொல்லாம் விடை பெற்றுச் சென்றீர் -உம்
அடி தேடி நிற்கின்றோம்.... உம் அன்பு உள்ளங்கள்....?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் எம்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்..

**கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கம்,**
**கனகபுரம் பொதுமக்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகிறோம்

உள்ளம் நிறைந்த உறவே!
ஊர் போற்ற வாழ்ந்திருந்தாய்...
கள்ளமற்ற பிள்ளைகளை ஈந்தாய்
பார்புகழ வாழ வைத்தாய்
எண்ணிப் பார்க்க இயலவில்லை
கண்ணில் காணா உலகுக்கு
காலனவன் கொண்டு செல்ல – நாம்
பண்ணிய பாவமென்ன?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் எம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்..

**மரியநாயம் திரோசம்மா சுபாங்கி**
இந்தியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

அழியாத ஓவியமாய், அணையாத தீபமாய் நீங்கள்
வாழ்ந்த காலத்தில் வாழ்வின் தத்துவங்களை
புரிய வைத்தீர்கள்...

இந்தப் பூமியின் அழகில் நீங்களும் ஒரு தனியழகு
உங்கள் நினைவுகள் எப்போதும் எங்கள் உள்ளங்களில்
அணையா நெருப்பாய் உங்கள் புன்னகை துளிர் விட்டுத்
தளிர்களாய் எங்கள் இதயங்களில் தளைத்துக்
கொண்டே இருக்கும்.

**தியாகராஜா குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

இதயத்தின் தூறலில் உயிர் பிழந்து போனது
நேற்றிருந்த உறவு ஒன்று இன்று முடிந்து போனது
காத்திருந்த உறவு கண்விழித்துப் பாத்திருக்க
பாத்திருந்த மரணம் பரிதவிக்கச் செய்தது
பேச்சிழந்து புலம்புகின்றோம் புலம்பியொரு
வார்த்தை உன்னிடத்துத் தேடுகின்றோம்.
கண்ணிருக்க மணியில்லை – காற்றிருக்க உயிரில்லை
இங்கே உறவிருக்க நீர் அருகில் இல்லை – உம்
நினைவோடு நாமும் வாழ்வோமே....

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

**இராயகதிரவேல் – நிலாயதாட்சி** குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இல.117,
கனகபுரம் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும்
கனடாவில் வாழ்ந்து வந்தவருமான அமரர்
நாகலிங்கம் சிவகுருநாதன்
(ஓய்வுபெற்ற முன்னாள் இ.போ.ச.தொழில்நுட்ப
உத்தியோத்தர்)

அனைவரையும் வசீகரிக்கும் அன்புமுகம்
எல்லோர்க்கும் ஏற்புடைய இனியகுணம்
பாரிலுள்ளோர் போற்றவரும் பண்புடமை
பகையாக வருவோரும் உம் புன்சிரிப்பை
பார்த்தாலே பாகாகி உம்வசமாவார்
நேற்றுவரை எம்மோடு நீங்கள்
இன்று நீங்கள் இல்லையென எண்ணும் போது
எம்மிதயம் பதைபதைத்து துக்கிக்கும்!
இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
இவரின் ஆம்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்**
**கனகபுரம், கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு

அமரர். உயர்திரு. சிவகுருநாதன் நாகலிங்கம்

ஆறாத்துயர் தந்து மீளாத் துயில் கொள்ளும் கனடாவில் வாழ்ந்த அமரர் உயர்திரு. சிவகுருநாதன் நாகலிங்கம் அவர்கள் 15.06.1941 இல் பிறந்து 19.05.2019 இல் கிளிநொச்சியில் சிவபதமடைந்தார். பிறந்த எண் கூட்டுத்தொகை 9 ஆகவும் இறந்த எண் கூட்டுத்தொகை 9 ஆகவும் கிடைக்கப்பெற்றமை இவர் வாழ்வில் கிடைத்த பாக்கியம்.

இலங்கையில் இ.போ.ச.இல் தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பதவி வகித்துக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அனைத்தையும் பேணிப்பாதுகாத்து, சக ஊழியர்களுடனும் பெருமை கொள்ளாத பேரன்புடையவராய் வாழ்ந்து அன்பைப் பெற்றவர். அமரர் அவர்கள் கனடாவில் வாழ்ந்த போதிலும், அன்னார் தான் பிறந்த வளர்ந்த பூமியிலேயே சிவபதம் எய்தியமை தன்னூர் இவரின் மனங்களில் நிலைத்து நின்றதே காரணம். அமரர் சுறுசுறுப்பானவர். சுற்றத்தாரையும், உற்றார், உறவினருடனும், உரிமை கொண்டாடி, உள்ளம் மகிழ உதவிகள் புரிந்த உயர்ந்த பண்பாளன். எந்நேரமும் சிரித்த முகமும், சீரான பார்வையும், சினம் கொள்ளாமல் மனிதரை மனிதர் மதிப்பது நம் கடமை.வள்ளுவர் பெருமான் சொல்லிய வழியல் வாழ்வது அறிவுடமை என்ற பெருநோக்கம் கொண்டு வாழ்ந்த பேரறிவாளன். கனடாவில் பலகாலம் பழகி, பண்பு, பாசம், வளர்த்த பண்பாளன். அண்ணன் தம்பி, தங்கையாய் அனைவருடனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி விளக்கேற்றி, குடும்ப விளக்காய், பிள்ளைகள், மருகர், மருகிமார், பேரப்பிள்ளைகளுடனும் பேரன்பு காட்டி, மதிப்பும், மரியாதையும் கொடுத்து பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் வாழ்ந்த செம்மல். தாய் மண் நேசித்த பற்றாளன். வாழ்ந்த மண் மீதும், வாழும் மண் மீதும் ஈர்ப்போடிருந்த இயற்கை நேயன். தேகம் பலிக்க தேசம் நாடிய தூயவன். வாழ்ந்தது போதுமென்றோ வானுலுகம் விரைந்தீர் ஐயா!

ஈழம் வலித்த போதேல்லாம் நீயும் இணைந்து இயங்கினர். தேசம் தேயந்திடும் போதெல்லாம் நேசம் கொண்டே நீ நின்றாய். உற்றார் உறவினர் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் கதறி அழக் காலனின் காலடியில் ஏனையா துறந்து ஏகினீர்?

அகமும், பொருளும், இல்லாளும், சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழில் உடம்பும் எல்லாம் வெளி மயக்கே இறைவா! என்ற பட்டினத்தாரின் பாடலுக்கமைய சிவன் பாதமலரைச் சென்றடைந்த சிவகுருநாதனே சாந்தி பெறுவாயாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அனலையூர் நீண்டகால நண்பனும், அன்பனும்
**பொன். விசுவலிங்கம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

ஐயகோ ஆண்டவன் அவசரந்தனை யார் அறிவார்!
ஒப்பாரி வைத்து அழும் உங்கள் செல்வங்களிற்கும்
ஓடியோடி உங்கள் கரம்தனை பற்றி வாழ்ந்த எமக்கும்
ஔடதமருந்தாக எங்களை வாழவைத்தவரல்லவா
எஃது ஆறுதல் எவருக்கு கூறுவதென்று தெரியவில்லை

எமையெல்லாம் நீங்கள் உடலால் விட்டுச் சென்றாலும்
வாழ்நாள் முழுவதும் உங்கள் உணர்வும்
சிந்தனையும் எம்முடனேயே சங்கமமாகி இருக்கும்

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?

கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணிர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்!

**செல்வநாயகம் மஞ்சுளா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான பூட்டப்பா,

என்றும் எங்கள் அன்பான பூட்டப்பா,
உங்கள் கட்டியணைப்பு எங்களை
விட்டு அகலவில்லை பூட்டப்பா.
உங்கள் அன்பான வார்த்தைகள்
எம் இருவர் உள்ளங்களிலும் கற்களில்
பொறித்த முத்துக்களாக இருக்கிறன
என்றும் உங்கள் வார்த்தைகளை
ஏற்றவர்களாக வாழ்வோம்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
என்றும் பிராத்திப்போம்.

இப்படிக்கு
பூட்டன் **துசாந்தன்**
Srilanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி தியாகராசா குடும்பத்தினரின் புலம்பல்

தம்பி, தம்பி என்று எங்கள் குடும்பத்தலைவர் தியாகராசாவை அழைத்துக்கொள்வீர்கள். தம்பி என்ற வார்த்தையை விட வேறுவிதத்தில் நீங்கள் எங்கள் தந்தையை அழைத்ததை நாங்கள் கேட்டதில்லை. அண்ணன் - தம்பி என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்று கற்பித்து தந்தவர் நீங்கள் தான்.

எங்கள் தந்தை (12-01-2001) திடீரென மரணமடைந்த செய்தியைக் கேட்ட நீங்கள் பட்ட துயரங்களை நேரில் கண்டவர்கள் நாங்கள். அன்றைக்கே உங்கள் உயிரும் பிரியப்போகிறது என்று அச்சமடைந்தவர்கள் நாங்கள். அவ்வளவு தூரம் நீங்கள் அவர் மீது வைத்திருந்த அன்பை உணர்ந்தோம். சகோதரர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதைக் கற்றுத்தந்த பெருமனிதன் நீங்கள்.

உங்கள் பிரிவால் உங்கள் குடும்பத்தினர் மட்டுமல்ல, உங்கள் தம்பி தியாகராசா குடும்பத்தினரும் ஆறாத்துயரத்தில் இருக்கின்றோம். பெரியப்பாவை இனி எப்போ எங்களால் பார்க்கமுடியும்? உங்கள் நினைவு எங்கள் மனதிருந்து நீங்கவே மாட்டாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி தியாகராசா லோகேஸ்வரி**

**(சின்னமணி)**

**பெறாமக்கள் றூபி**

**கண்ணா, லவன், சிவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

என்ர குஞ்சுகளே! என்ர செல்வங்களே! என்று அழைத்துக்கொண்டிருக்கும் உங்கள் குரல் கேட்காமல் தவிக்கின்றோம் தாத்தா. எங்களைத் தூக்கி முத்தமிடும் அந்த இனிமையான உணர்வுகளுக்காக ஏங்கி நிற்கிறோம் தாத்தா.

எங்களை உங்களிடமிருந்து பிரிக்க இறைவன் செய்த இந்தக்காரியம் நியாயமாகுமா தாத்தா. கிறுகதைகள் சொல்லித்தந்து எங்களை மகிழ்விப்பீர்கள். பாடசாலைக்கு கூட்டிச்சென்றீர்கள். நாம் விரும்பியவற்றை வாங்கித் தருவீர்கள். எங்களை மடியில் வைத்து கொஞ்சி மகிழ்வீர்கள்.

பெரிதாக வளர்ந்த பின்னரும் எங்களை கட்டிப்பிடித்து-கடித்து முத்தமிடுவீர்கள். நீங்கள் இல்லாத வீடுகள் காடு போலாகிவிட்டது. உங்கள் கலகலப்பான பேச்சும், சிரிப்பும் எங்கள் வீடுகளில் இனி எப்போ கேட்கும் தாத்தா. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் எங்கள் வளர்ச்சியில் உங்கள் ஆசி என்றும் இருக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. நிம்மதியாய் தூங்குங்கள் தாத்தா.

பேரப்பிள்ளைகள்

**சரன் பாலமுரளி, சாருகன் பாலமுரளி**

**கிரிசன் தவராசா, பவிசன் தவராசா**

**சிவராஜி பாலச்சந்திரன், விஸ்ணு பாலச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் புலம்பல்

பெறாமக்களாகிய எங்களை பெற்ற பிள்ளைகள் போல நடத்திய மாமனிதன் நீங்கள்.! எங்களை நல்வழிப்படுத்துவதிலும் வெளிநாடு வர உதவிய மனப்பாங்கினையும் நினைத்து நினைத்து அழுகின்றோம்.

உங்களால் செய்ய முடியாது என்ற ஒன்றையும் நாம் உங்கள் வாழ்க்கையில் காணவில்லை. சொந்தக்காரர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து வாழ்வதில் மகிழ்ச்சி அடைபவர் நீங்கள். உங்கள் பிள்ளைகளைப் போலவே எங்கள் மீது அன்பு செலுத்துனீர்கள்.

உங்கள் மனசு ஒரு திறந்த பல்கலைக்கழகம் என்றே சொல்லவேண்டும். புத்திமதி சொல்வீர்கள். இப்படித்தான் வழவேண்டும் என்று நல்வழிகள் சொல்லித்தருவீர்கள். உங்களைப் போன்ற மனிதர்களை இனி எப்போது காண்போமோ!

உங்கள் நினைவு என்றும் எங்களிடம் நிலைத்திருக்கும்.

உங்கள் அன்புப்
**பெறாமக்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனாககப்பிறந்து மனிதனாய் வாழ்ந்தவர்



மனிதனாகப்பிறந்து மனிதன் தான் என்ற பெருமையுடன் மறைந்த நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்களுடன் நீண்டகாலமாக இறுதிவரை தொடர்பிலிருந்தவன் என்ற வகையில் நான் கொடுத்து வைத்தவன் என்று கூறுவதில் பெருமிதம் அடைகிறேன்.

சிவகுருநாதன் குடும்பத்தினரை 1965 லிருந்து எனக்குத் தெரியும். சிவகுருநாதனின் அக்கா நீலாயதாட்சி எழுவைதீவு “மீசை” விதானையார் என்று அழைக்கப்பட்ட கதிரவேலு விதானையாரின் மகன் ராஜகதிரவேலுவை (அவரும் விதானையார்) திருமணம் செய்ததின் மூலம் அவரை அறிவேன். ராஜகதிரவேலுவின் சகோதரியின் கணவர் உமாபதி அவர்கள் தான் அப்போது பிறப்பு இறப்பு பதிவாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தவர். எமது திருமணத்தை பதிப்பு செய்து வைத்தவர்.

திருநெல்வேலி இராஜவீதி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தலைவராக நான் பதவி வகித்த காலத்தில் எனது தாயாரின் ஒன்றுவிட்ட தம்பி கந்தசாமி மாமாவும் மாமி நாகபூசனி மச்சாள் ரஞ்சினியும் திருநெல்வேலியில் வசித்துக் கொண்டிருந்த போது அறிமுகமான ஒரு பெரியவரின் பெயர் தம்பையா அவர்கள். கம்பீரமான தோற்றமும், நற்பண்புடன் பழுகுவதற்கு இனிமையான பண்புள்ளம் கொண்ட தம்பையா அப்பாவுடன் எனக்கு நெருங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு இருந்தது. அவரது பெறாமகள் சின்னமணியைத்தான் சிவகுருநாதனின் அன்புத் தம்பி தியாகராசா கல்யாணம் செய்திருந்தார்.

திரு.சிவகுருநாதனும், அவரது தம்பி திரு. தியாகாராசாவும் 1983ல் பிரான்ஸ் நாட்டில் என்னைக் சந்தித்ததிலிருந்து இவர்களது நட்பு நீடித்தது. அப்போது இவர்கள் இருவரும் Voolksvagan கார் கம்பனியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். வாரவிடுமுறை நாட்களில் நான் அவர்களது இருப்பிடத்துக்கு செல்வதும் அவர்கள் எங்கள் இல்லத்துக்கு வருவதும் வாடிக்கையான காரியம். தியாகராசாவின் மூன்று பெண்பிள்ளைகளும் நான் நடத்திய பத்திரிகைக்கு பல உதவிகளைச் செய்தனர்.

இப்படி எமது தொடர்புகள் நீடித்திருக்க, திடீரென தியாகராசா அவர்கள் நித்திரையிலிருந்து எழுந்தவர் மயங்கி விழுந்து விட்டார். வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது சிலமணி நேரத்துக்குமுன் மூளைச்சாவு அடைந்துவிட்ட செய்தி சொல்லப்பட்டது. அப்போது இவரது ஒரேயொரு மகன் லவனுக்கு வயது 17 மட்டுமே. மூளைச்சாவு அடைந்தவரின் ஏனைய உறுப்புகள் இதயம் உட்பட அனைத்தும் திறம்பட இயங்குவதாகவும் அவற்றை தானம் செய்வதால் பலரது உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்று டாக்டர்கள் தியாகராசாவின் மகன் லவனுக்கு எடுத்துரைக்கின்றனர். உறுப்புகளை தானம் செய்வதில் அக்கறை கொண்டிருந்த தந்தையின் உணர்வுகளைத் தெரிந்திருந்த அந்தச் சிறுவன் உடனே சம்மதிக்க தாயாரை வரவழைத்து அவரின் ஒப்புதலுடன் அவரது உறுப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் செய்யப்பட்டன. அவரால் பலர் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பார். சிவகுருநாதனும் தம்பி தியாகராசாவும் எப்போதும் எல்லோருக்கும் உதவும் குணம் கொண்ட தயாள சிந்தனையாளர்கள் என்பதைப் பதிவு செய்வதற்காகவே இவற்றை இங்கு குறிப்பிட்டேன். பிள்ளைகளையும் அப்படியான குணாதிசயங்களுடன் வளர்த்துள்ளார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

சிவகுருநாதன் அவர்கள் 1986ல் கனடாவுக்கு சென்றுவிட்டார். 1990 முதல் 2019 வரை கிட்டத்தட்ட இருபது தடவைகளுக்கு மேல் நான் கனடா சென்றிருப்பேன். அங்கு செல்லும் போதெல்லாம் Toronto விமான நிலையத்திலிருந்து பின்னர் France திரும்பும் வரை சிவகுருநாதன் குடும்பத்தினர் என்னை நிலத்தில் நடக்க விடுவதில்லை. நான் அலைதீவைச் சேர்ந்தவன். எனது உறவினர்கள் பலர் கனடாவில் உள்ளனர். ஆனாலும் நான் இவர்களது வீட்டிலேயே தங்குவேன். சிவகுருநாதன் அவர்களின் ஒரே மகன் தர்சினி என்னை மிகவும் மரியாதையுடனும் அன்புடனும் கௌரவிப்பார். உபசாரம் செய்வார். தன் கணவரை "வாடா செல்வன்" என்று அழைப்பதைப் போல தந்தையை "வாடா சிவகுருநாதன்" என்று அழைப்பதைப் போல, கணவரின் தந்தை மாமாவை "வாடா ராஜரத்தினம்" என்பது போல என்னையும் "வாடா காசிலிங்கம்" என்று உரிமையுடன் அழைப்பார்.

திரு. சிவகுருநாதன் அவர்களிடமிருந்து இவர் சுகயீனமுற்ற கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களுக்கு முன் ஒரு தொலைபேசித் தகவல் - Viber மூலம் வந்தது. தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு சிவகுருநாதன் கேட்டிருந்தார். தகவலைப்பார்த்த மறு வினாடியே தொடர்புகொண்டேன். தொலைபேசிப் அழைப்பை ஏற்றதும், என்னுடன் வழமையாக பேசுவதைப் போல "மச்சி" என்பதற்குப்பதிலாக சொல்லு தம்பி – தம்பி தம்பி என்று பேசிக்கொண்டிருந்தார். எனது குரலை அடையாளம் கண்டு கொள்ளவில்லைப்போலும் என்று முதலில் நினைத்தேன். ஆனால் அவரது இல்லாள் "கிளி' எங்கே என்று கேட்டதும் - நான் தான் என்பதை அறிந்து தான் பேசுகிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். நாட்டு நிலைமைகள் பற்றிக்கேட்டேன். கிளிநொச்சியில் பிரச்சினைகள் இல்லை என்றார். நான் இலங்கைக்கு வரும் திட்டம் இருப்பதாகச் சொன்னேன். ஏதும் அவசரவேலை என்றால் - வா! அல்லது தவிர்க்கலாம் என்றார்.

மச்சி, மச்சி என்று பேசும் இவர், இத்தடவை வார்த்தைக்கு வார்த்தை தம்பி –தம்பி என்று பேசியது எனக்கு ஒரு நெருடலாக இருந்தது. உடனே மகள் தர்சினியுடன் தொடர்புகொண்டு "பப்பா" இப்படிப் பேசினார் ஏன் என்று தெரியவில்லையே என்ற என் ஆதங்கத்தைக் கூறினேன். அவரும் உடனே தகப்பனாரை தொலைபேசியில் அழைத்து "ஏன் பப்பா – காசிமாமா நான் இப்படிப் பேசினீர்கள் வழமைபோல இனி மச்சி - மச்சி என்றே பேசுங்கள்" என்று கூறினாராம். நான் அப்படிப் பேசவில்லையே என்றும் சொன்னாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை இங்கு கூறுவதற்கு காரணம் உண்டு. இவரது இறப்பு உணர்வு இவருக்கு ஆரம்பித்துவிட்ட காலமது என்று நினைக்கிறேன். பிரியமானவர்களை அழைத்துப் பேசுவது என்பது சாத்தியமானது என்று நம்முன்னோர்களின் அனுபவங்களிலிருந்து உணர்த்தப்பட்ட உண்மைகள் தான்! என்னுடன் பேச வேண்டும் என்ற உணர்வில் என்னை அழைத்திருக்கிறார். தனது உள்ளுணர்வை பகிர்ந்து கொள்ளும் தன்மை அப்போது அவரிடம் இருந்திருக்கவில்லைப் போலும்.

இறுதிக் கிரியைகள் முடிந்த பின் இவரது மகன் சந்திரன் வீட்டில் நாம் பேசிக் கொண்டிருந்தபோது சிவகுருநாதன் அவர்களின் மருமகன் செல்வன் சொன்னார். "நான் திருமணம் செய்த காலத்திலிருந்து மூன்றே மூன்று பேரின் பெயர்களை அடிக்கடி 'பப்பா' சொல்லுவார். அதில் ஒருவர் காசிலிங்கம்" என்று! இதைக் கேட்டதும் ஆனந்தக் கண்ணீர் விட்டேன். இந்த உண்மையை பலர் மத்தியிலும் வெளியிட்ட செல்வனைக்கட்டித் தழுவி அழுதேன்.

ஆம் உண்மையில் சிவகுருநாதன் அவர்கள் என் இதயத்தில் இடம்பிடித்த ஒரு மாமனிதன்!

உதவும் பண்புடையவர் எப்போதும் கனிவான பேச்சு - சிரித்த முகம் - தெய்வீகப்பற்று – சமூகத்தொண்டில் ஆர்வம், மனிதர்களை மதிக்கும் தன்மை, உறவினர்களைப் பேணும் பண்பு மொத்தத்தில் மனிதப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியின் மாண்பினை – மனிதனாகப் பிறந்து மனிதனாகவே மடிந்து பெருமை சிவகுருநாதன் அவர்களையே சாரும். இவரின் இறுதி அஞ்சலியின் போது திரண்டிருந்த மக்கள் கூட்டம் இவர் எப்படியான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார் என்பதை உணர்த்தியது. இறுதி அஞ்சலி நாளில் - கிளிநொச்சி கனகபுரத்தில் உள்ள அவரது இல்லத்திலும் மக்கள் கூடி அஞ்சலி செலுத்திய மாண்பையும் வீடியோ காணொலி மூலம் நேரடியாகக் கண்டோம். அங்குள்ள பிரமுகர்கள் பலர் அதில் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தியதைப் பார்த்தோம்.

கனடாவில் மட்டுமல்ல அவர் போகும் இடங்களிலெல்லாம் மனிதர்களைப் பேணி வந்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.கனடாவில் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்த மிசிசாகா நகரில் ஜெயதுர்க்கா என்ற ஆலயம் அமையப்பெற இவருடைய பங்களிப்புகள் இருந்துள்ளது என்பதையும் அதன் பரிபாலன சபையின் தலைவாராகவும் இவர் தொண்டு புரிந்து நற்பணியாற்றிய பெருமையும் இவருக்கு உண்டு என்பதில் நண்பன் என்ற முறையில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது அன்பு மனைவிக்கும் பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், பெருமக்களுக்கும் இவ்விழப்பை தாங்கிக் கொள்ளும் சத்தியை ஆண்டவன் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம்.

**எஸ்.கே. காசிலிங்கம்**

(பிரான்ஸ்)



noolaham.org | aavanaham.org

மிசிசாகா இந்து மகா சபை ஸ்தாபக உபதலைவர்

## நாகலிங்கம் சிவகுருநாதன்

அவர்களது பிரிவாற்றாது வெளியிடும்

## கண்ணீர் அஞ்சலி



உலகினிலே வழங்குகின்ற மொழியுள் எல்லாம்
உன்னதமாம் பழைய மொழி எனப் பேர் கொண்ட
அலகிலதாம் பெருமையுறு தமிழைப் பேசும்
அந்தமிலாப் புகழ் கொள்ளும் இனத்துட் தோன்றி
பலவகையும் தமிழும் அதைப் பேசுவோரும்
பண்பு நெறி தவறாதோர் என்ற உண்மை
மலையெனவே உறுதியுற உனது சொந்த
வாழ்வினையே அர்ப்பணித்துச் சேவை செய்தாய்

ஊரவர்கள் அயலோர்கள் சொந்தங் கொண்ட
உற்றவர்கள் தெரிந்தவர்கள் மற்றுமுள்ள
சீர் திகழும் நண்பர்களாய் உன்னைச் சுற்றிச்
சேர்ந்தவர்கள் அனைவருமே மகிழ்ச்சி கொள்ள
பாருலகில் நல்லவைகள் மட்டும் நோக்கும்
பரந்த மனங் கொண்டவனாய் வாழ்ந்து சென்ற
ஆருயிராம் அரு நண்பா சிவா நீயின்றி
அகிலமதில் வாழ்வதற்கோர் வழி நீ கூறாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியைச் சைவ மதம் தன்னை எங்கள்
தாய் நாடாம் தமிழீழம் தன்னை உன்தன்
அமைதிவழி கடைப்பிடிக்கும் சொல்லால் செய்கை
ஆனவையால் பெருகேற்றி நின்ற ஐயா
எமது பழம் பெருமை மிகு நாகரீகம்
இவ்வுலகு முழுவதுமே வியந்து நோக்க
அமைந்ததனை உலகறியும் எடுத்துக் காட்டாய்
ஆனவனே உனை என்று காண்போம் கூறாய்

தொல்லைகளும் தொல்லைகளால் சோகங் கொண்டு
துவண்டுளன்று வாழ்க்கையினை வெறுத்த பேரும்
நல்ல சிவ குரு நாதா உன்னைக் கண்டால்
நாயகனே மனந்தேறி அமைதி கொள்வர்
எல்லையிலாப் புகழ் தனையே சேகரித்து
ஈடிணையே இல்லாத வாழ்வு கண்டாய்
பல்வகையும் தேவையுற்றோர்க் குதவி வாழ்ந்த
பண்புடையோய் உனதாத்மா சாந்தி கொள்க.

**யாப்பு: எஸ்.எஸ். அச்சுதன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தித்திக்கும் மூன்று முத்தம் எங்களுக்கு தந்திடுவாய் பப்பாவே

எங்களின் ஐயா அம்மாவில் அன்பு கொண்ட அன்பான பப்பாவே!

கண்டவுடன் மூன்று முத்தம் தந்திடுவாய் முகத்தினிலே வருத்தம் என்று அறிந்தவுடன் வந்து நிற்பாய் வாசலிலே நாங்கள் கூட்டுக் குடும்பமாக குதூகலித்து வந்தோம் பப்பா உங்களின் கனிவான பேச்சுக்களால் துன்பங்களை நாம் மறந்து துணிவுடனே வந்தோம்பப்பா, எங்களின் குடும்பம் ஒரு தேன்கூடு என்று சொல்லி, உங்களின் தேனியை ஒப்படைத்தாய், அதில் அந்த தேனி வளர்வதற்கும், மலராக நீ இருந்தாய் பப்பா. உங்களின் ஞாபகச் சின்னங்கள் - எங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒலிக்கிறதே. எங்கள் அம்மாவின் துயரத்தில் ஆழந்திருந்த போதினிலே எங்களின் துயர்துடைக்க காத்திருந்தாய். உங்களை வரவேற்க எங்கள் அம்மா இருக்கின்றார். ஒன்று உங்களின் மனைவி பிள்ளைகளின் துயர் துடைக்க யார் வருவார் பப்பாவே.

உங்கள் ஆசை மருமகனை பெற்ற பிள்ளைபோல் பார்த்தீர்கள். அவன் சுமக்கும் பாரங்களையும் நீ சுமந்து வந்தாய் பப்பா. பெற்றோர்கள் மறைவுகளால் பிள்ளைகள் நாங்கள் இன்று ஊனமுற்ற உயிர்களோடு நாம் வாழ்ந்து வருகின்றோம்.

எங்களின் உயிர் நீங்கும் வரை
உங்களின் நினைவுகளே அலைபாயும்

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

இப்படிக்கு

**இரா. குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மார்த்த அஞ்சலி

## உயர்திரு சிவகுருநாதன் நாகலிங்கம்

முன்னாள் இ.போ.ச. தொழில்நுட்ப வினைஞர், கிளிநொச்சி

தாய்மடியில்: **15 June, 1941** திருவடியில்: **19 May, 2019**



ஆராரோ எல்லாம் புலம் பெயர்ந்தோம்
அகதிகளாய் தடம் புரண்டோம் - ஆனாலும்
ஊராரோ நாமிங்கு சீராக வாழ்வதற்கு
அண்ணன் சிவகுரு நாதன் அவர்களும் ஓர் காரணமே
ஏற்றமுற வாழ இறை போற்றி என்றும் நாம் துதிக்க
ஆலயம் மிசிசாகா நகரிலும் வேண்டுமென்று
எவரெல்லாம் கனவுகள் கண்டனரோ
அவர்சிலரில் இவரும் இன்றி அமையாதவரே
பெயரில் திருமுருகன் பேர்பெறு திரு சிவ குருநாதன் இவர்
இந்துமகாசபை அமைய இவரும் ஒரு கருவி
அன்னை ஜெயதுர்க்கா ஆயபேர் ஆலயமாய் மிளிர
அரும் பணி ஆற்றியநல் சிவ (ப்) பிறவி
தொண்டும் திருப்பணியும் தொலை நோக்க நற்பணியும்
பண்டும் இன்றும் என்றும் பராசக்தி அருள்புரிய
கொண்டும் கொடுத்தும் கோயிலாய் எழுந்தருள
கட்டிடமுள காணியுமாய் கைகூட உழைத்த திரு
கள்ளம் கபடமற்ற கனிந்த நெஞ்சம்
காண்போரை புன்சிரிப்பால் கவர்ந்து இழுக்கும் உள்ளம்
என்னவரோ அன்னவரோ எவரையுமே
தன்னவராய் மதிக்கும் தயாள சிறந்த குணம்
முன்பின் முகமறியா மனிதரையும்
முகம்மலர கரம் கொடுத்து உபசரிக்கும்
மேன்மை கொள் சைவ மாண் மனிதப் பண்பழக்கம்
அப்பன் என்றும் தம்பி என்றும்
அம்மா, பிள்ளை மகள் மாரே என்றும்
எப்பவுமே மகிழ்ச்சி பொங்க இனிதுவக்கும்
தக்கவோர் தகவுள தக்கான்
தகைமிகு திரு நா சிவகுருநாதன்..
அன்னை மண்தொட்டு இறைபதம் எய்தியமை -என்னவோ
இந்துமகா சபைக்கும் ஏனையர்க்கும் ஈடிலா பேரிழப்பே...
அன்னாரின் ஆன்மா அமைதியொடு சாந்தியுற
அம்பாள் ஜெயதுர்க்கா அன்பர் நாம் இறைஞ்சுகிறோம்.

**Hindu Mission of Mississauga**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு அண்ணா எங்களை விட்டுப் பிரியவேயில்லை

மண்ணில்
15 -6-1941



விண்ணில்
19 -5-2019

அமரர்

## நாகலிங்கம் சிவகுருநாதன் பிரிவுத்துயர் மடல்

பல ஆண்டு காலம் பழகிய உறவுகள் தாங்கொணாப்பிரிவால நலிந்து நிற்கிறார்.
இந்தப் பூமியில் எழுபத்தேழு ஆண்டுகள் வாழத்தானா வகுத்தவன் வகுத்தான்.
வையகம் தனினில் வாழ்ந்தவரெல்லாம் வாழுறை தெய்வத்துள் வைப்பதை கலாசாரமாக்கினோம்.
வாழ்க்கையென்பது பயிற்சியாக அதில் தேர்ச்சிபெற்றவர் தெய்வமாய் ஆகிறார். நீங்களும் கூடத்தான்.

குரு அண்ணா, குருமாமா, என்று எல்லோர் வீட்டிலும் தாய்வழி உறவுடன் சொல்லுவார்.
கட்டி அணைக்கவும் உரிமை கொண்டாடவும் கடவுள் கொடுத்த வரமென வாய்த்தவர் நீங்கள்.
அறியாமை இருளை அகற்றிடத்தானோ குருவை மானிடர் பெற்றுக் கொண்டனர்.
அன்பும் அறிவும் அறிவுரை சொல்லும் ஆற்றலும் கொண்டதால் குருவர் (குருஅவர் ) என்று குவலயம் அழைத்தது.

இந்த மானிட வாழ்க்கையின் அறிவுரையாக இருப்பதால் தானோ நீங்கள் சாகாவரம் பெற்றவர்கள் வரிசையில் இருக்கிறீர்கள்.
நாதல் வாழ்வில் இலக்கணமானதால் உங்களைக் காலம் முழுவதும் காதலில் காணுவோம்.
மழை கருக் கொண்ட இடந்துக்கன்றிப் பொழியும் இடத்திலே புகழைப் பெறுகிறது.
திருநெல்வேலியில் பிறந்தாலும் உருத்திரபுரமே உங்கள் கருணை மழைக்குக் களமாய் மிளிர்ந்தது .

துள்ளித்திரிந்த காலம் முழுவதும் தூக்கி வளர்த்த மணி
உங்களைத் தன்னுடன் இணைக்கத் தவிப்புடன் இருந்தது.
எண்ணில் அடங்கா உங்கள் நினைவுகளெல்லாம் நம் வன்னிமண்ணை நிரப்பிடக் கண்டோம்
பாசங் கொண்டு அங்கு செல்பவரெல்லாம் நம் மண்ணின் மைந்தனை சேரிடைக் காணுவார்.

பசும்புல் வெளியிடைக் காற்றாயிருப்பாய் கனனியெங்கும் கதிராயிருப்பாய்.
காண்போர் முகத்தில் சிரிப்பாயிருப்பாய் உழைப்போர் வியர்வைத் துளியாயிருப்பாய்
கல்விச்சாலைக் கந்தும் ஒலியாய் கறவை கன்றை அழைக்கும் குரலாய்
முத்தம் கொடுக்கும் மண்ணாய் வான முகிலாய் என்றும் உலகிலிருப்பாய்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி


## உழவர் ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்

நித்திரை போவது நியதி என்றால்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்.
இன்பங்கள் சேருமிடத்தில் இன்முகம் காட்டி நின்றீர்
பொது சேவை என்னும் போது பொக்கிசமாய் சேவை செய்து
விடிவதனை எம் வாழ்வில் விருட்சமாய் வளர்த்து ...
மிடி உற்றார் என்றால் படி தேடி சென்றிடுவீர்....
நாதியற்ற உள்ளத் தேவைதனை தேடிச்சென்று தீர்த்திடுவீர்...
இடிமின்னல் மழை வந்தது போல....
கொடி ஏதும் அசையாமல் புயல் வந்தது போல.....
விடை ஏதும் சொல்லாமல் விடைபெற்றுச் சென்றீர் - உம்
அடி தேடி நிற்கின்றோம்.... உம் அன்பு உள்ளங்கள்....!



## அமரர். நாகலிங்கம் சிவகுருநாதன்

ஓய்வுபெற்ற முன்னாள்
இ.போ.ச தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்.
இல 117, கனகபுரம், கிளிநொச்சி.

மலர்வு 15.06.1941 உதிர்வு 19.05.2019

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கனடா வாழ் கனகபுரம் உறவுகள்
கனகபுரம் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து உருவில் என்னை வளர்த்த பப்பாவிற்கு பிரியாத பிரியாவிடை



மண்ணில்
15-06-1941

விண்ணில்
19-05-2019

பப்பா எனும் உரிமையிலே அன்பை நீ போதித்தாய்
அக்கா எனும் வடிவில் நின்று அறிவுரைகள் கூறிவந்தாய்
தங்கை வடிவில் நீ எனக்கு தலைவாரிச் பூச்சிட்டாய்
மழலை மொழி பேசி மகளாக காட்சி தந்தாய்
தோலில் கைபோட்டு தோழியாக கதை சொன்னாய
என் குறையைத் தீர்ப்பதற்கு
ஐந்து உருவில் உருவெடுத்தாய் என் ஆசைப் பப்பாவே
இத்னையும் செய்து விட்டு என்னை விட்டு ஏன் சென்றாய்
பட்டு புடவை உடுத்து என்னை
பல வடிவில் பார்த்து ரசித்தாய் - இன்று
பட்டு வேட்டி கட்டி பேழைக்குள் இருக்கின்றாய் - பப்பா
பத்தி எரிகிறதே என் மனசு பேழைக்குள் வந்து நான்
படித்திடவா உன் அருகே துன்பங்கள் வந்த போதினிலும்
துணிவு தந்து துயலவைத்தாய் - இன்று கண்மூடித் துயிறுகின்றாய்
என் துயிலை எழுப்பிவிட்டு கண்ணை இமை காப்பது போல்
காத்து வந்தாய் உன் மகளை உன் கண்னை மூடிவிட்டாய் - என்
கண்ணில் நீர் சொரிய - இனி காலமெல்லாம் உன் நினைவுகளே
கடைசி வரை அரங்கேறும் - என்னை
கைப்பிடித்த கணவரும் - இன்று கலங்குகின்றார் உன் நினைவால்
நீங்கள் வளத்த பேரரும்.:.பேதளிந்து போயினரே
பிரியமான பப்பாவே – உனக்கு பிரியாவிடை தரமாட்டேன் - ஏனெனில்
என்றுமே என்னில் உன்னை பிரிக்க முடியாது பப்பா.

***ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!***

**பிரியமான மகள்**
**தர்சினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் இ. போ. ச. தொழில்நுட்ப உத்தியோகத்தர் கிளிநொச்சி

# அமரர் சிவகுருநாதன் நாகலிங்கம் அவர்களின் நினைவுப் பகிர்வு

வன்னிவளநாட்டை வளப்படுத்தி வந்தவர்களின் வாரிசுகள் நாங்கள். இரணைமடுக் குளத்தின் நீரையும் உருத்திரபுரத்தின் மண்ணையும் பிசைந்து விளைவித்த நெல்லும் காய் கனிகளும் எம் உயிரையும் உடலையும் வளர்த்ததால் நாமெல்லாம் அத்தாயின் மக்கள்தான்.

இன்றைய நாளில் எமது கண்ணீரால் உங்களின் பாதங்களைக் குளிர்வித்துக் கொண்டிருக்கிறோம். அதற்காகவாவது நீங்கள் உயிர்த்தெழ மாட்டீர்களா என்ற நம்பாசையுடன். இறப்பு என்பது இயற்கையின் நியதி எனச் சொல்லப்பட்டாலும் எம்மால் அதனை ஏனோ ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பிறந்தஇடம் வளர்ந்தஇடம் வாழ்ந்தஇடம் மறைந்தஇடம் எல்லாமே வேறு வேறாகத் தப்பிப் பிழைத்தலுக்காய்த் துரத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும் எமது இனத்தின் எல்லாப் பரிமாணங்களையும் அனுபவித்து முடித்தவர்கள் நீங்கள். அதனால் தான் போதுமென்று புறப்பட்டுவிட்டீர்களா.

கனடாவில் உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று அதனூடாக எமது கிராமத்தின் வளர்ச்சிக்காய் உழைப்பையும் பணத்தையும் உவந்தளித்த உத்தமர் நீங்கள். உங்களின் வாரிசுகளையும் தாய்நாட்டினதும் சங்கத்தினதும் உயர்வுக்காய்த் தந்துக் கொடுத்தவர்கள் நீங்கள்.

கிளிநொச்சியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் உங்கள் தொழில் நுட்பக்கல்விக்கும் பட்டறிவுக்கும் கிடைக்கப் பெற்ற சவால்கள். உங்கள் கைபட்டதால் கிடைத்த வெற்றி என்றென்றும் உங்கள் பெயரை உச்சரித்துக் கொண்டேயிருக்கும்.

கனகபுரத்தில் குடியேறி நீங்கள் பதப்படுத்திய பண்ணைகளில் உள்ள மரங்களும் செடி கொடிகளும் பசுமையெனப் பொலிவுகொண்டு தனித்திருக்க முடியாத சோகத்தால் தம்முடன் உங்களை இணைத்துக் கொண்டனவா.

களித்திருக்கும் காலத்தின் கனவுகளையெல்லாம் சிதைக்கும் மரணம் என்பது என்றும் மனித குலத்துக்கான சவால்தான். தங்களின் மறைவு எங்களின் மனங்களைச் சம்மட்டிபோல் அடித்துக் கொண்டேயிருக்கிறது உங்கள் மறைவின் வலியினைத் தீர்க்கும் மருந்தினை ஒரு முறையாவது எழுந்து சொல்லிவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள். தாங்கொணாத்துயருள் தத்தளிக்கும் உங்கள் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் எம்மிடமில்லை.

**உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகம்-கனடா**
**2019-05-26**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி.....



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 | 19 |
| 06 | 05 |
| 1941 | 2019 |

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இல.117, கனகபுரம் கிளிநொச்சியை
நிரந்தர வசிப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமான

அமரர்

## நாகலிங்கம் சிவகுருநாதன்

(ஓய்வுபெற்ற முன்னாள் இ.போ.ச.தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

அனைவரையும் வசீகரிக்கும் அன்புமுகம்
எல்லோர்க்கும் ஏற்புடைய இனியகுணம்
பாரிலுள்ளோர் போற்றவரும் பண்புடமை
பகையாக வருவோரும் உம் புன்சிரிப்பை
பார்த்தாலே பாகாகி உம்வசமாவார்
நேற்றுவரை எம்மோடு நீங்கள்
இன்று நீங்கள் இல்லையென எண்ணும் போது
எம்மிதயம் பதைபதைத்து துக்கிக்கும் !

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்
கனகபுரம், கிளிநொசசி.

வேலன் பதிப்பகம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்வு

# அமரர் உயர்திரு சிவகுருநாதர் நாகலிங்கம்



மண்ணில் வரவு
15.06.1941

விண்ணில் உறைவு
19.05.2019

## அமரர். உயர்திரு. சிவகுருநாதன் நாகலிங்கம்

ஆறாத்துயர் தந்து மீளாத் துயில் கொள்ளும் கனடாவில் வாழ்ந்த
அமரர் உயர்திரு. சிவகுருநாதன் நாகலிங்கம் அவர்கள்
15.06.1941 இல் பிறந்து 19.05.2019இல் கிளிநொச்சியில் சிவபதமடைந்தார்.
பிறந்த எண் கூட்டுத்தொகை 9 ஆகவும் இறந்த எண் கூட்டுத்தொகை 9ஆகவும் கிடைக்கப் பெற்றமை
இவர் வாழ்வில் கிடைத்த பாக்கியம்.
இலங்கையில் இ.போ.ச. இல் தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பதவி வகித்துக்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அனைத்தையும் பேணிப்பாதுகாத்து,
சக ஊழியர்களுடனும் பெருமை கொள்ளாத பேரன்புடையவராய் வாழ்ந்து அன்பைப் பெற்றவர்.
அமரர் அவர்கள் கனடாவில் வாழ்ந்த போதிலும், அன்னார் தான் பிறந்து வளர்ந்த பூமியிலேயே
சிவபதம் எய்தியமை தன்னூர் இவரின் மனங்களில் நிலைத்து நின்றதே காரணம்.
அமரர் சுறுசுறுப்பானவர், சுற்றத்தாரையும், உற்றார், உறவினருடனும், உரிமை கொண்டாடி, உள்ளம் மகிழ
உதவிகள் புரிந்த உயர்ந்த பண்பாளன், எந்நேரமும் சிரித்த முகமும், சீரான பார்வையும், சினம் கொள்ளாமல்
மனிதரை மனிதர் மதிப்பது நம் கடமை,
வள்ளுவர் பெருமான் சொல்லிய வழியில் வாழ்வது அறிவுடமை
என்ற பெருநோக்கம் கொண்டு வாழ்ந்த பேரறிவாளன்.
கனடாவில் பலகாலம் பழகி, பண்பு, பாசம், வளர்த்த பண்பாளன்.
அண்ணன், தம்பி, தங்கையாய் அனைவருடனும், ஒளி விளக்கேற்றி, குடும்ப விளக்காய்,
பிள்ளைகள், மருகர், மருகிமார், பேரப்பிள்ளைகளுடனும் பேரன்பு காட்டி, மதிப்பும், மரியாதையும் கொடுத்து
பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் வாழ்ந்த செம்மல்.
தாய் மண் நேசித்த பற்றாளன், வாழ்ந்த மண் மீதும், வாழும் மண் மீதும் ஈர்ப்போடிருந்த இயற்கை நேயன்.
தேகம் பலிக்க தேசம் நாடிய தூயவன், வாழ்ந்தது போதுமென்றோ வானுலகம் விரைந்தீர் ஐயா!
ஈழம் வலித்த போதெல்லாம் நீயும் இணைந்து இயங்கினாய்.
தேசம் தேயந்திடும் போதெல்லாம் நேசம் கொண்டே நீ நின்றாய்.
உற்றார் உறவினர் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்
கதறி அழக் காலனின் காலடியில் ஏனையா துறந்து ஏகினீர்?


அகமும், பொருளும், இல்லாளும், சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழில் உடம்பும் எல்லாம்
வெளி மயக்கே இறைவா! என்ற பட்டினத்தாரின் பாடலுக்கமைய
சிவன் பாதமலரைச் சென்றடைந்த சிவகுருநாதனே சாந்தி பெறுவாயாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அளவையூர் நீண்டகால நண்பனும், அன்பனும்
பொன். விசுவலிங்கம்
647 889 6114


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்

தன் அன்பான மனைவியுடன்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்
தன் அன்பான மனைவியுடன்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்
தன் அன்பான மனைவியுடன்...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன்

தன் அன்பான மனைவியுடன்...



அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்களின்

இளமைக்கால நினைவுகள்...









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்களின்
இளமைக்கால நினைவுகள்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்களின்
இளமைக்கால நினைவுகள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு. நாகலிங்கம் சிவகுருநாதன் அவர்களின்

இளமைக்கால நினைவுகள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் மறவா நன்றி நவிலல்

எமது வாழ்க்கைக்கு உறுதுணையாகவிருந்து எம்மை ஏற்றிப்போற்றி பாதுகாத்து நல்வழிக்கு வித்திட்ட எங்கள் தந்தையாரின் மறைவுச் செய்திகேட்டதும் நேரில் ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் தங்கள் அனுதாபங்களை தெரிவித்துக்கொண்டவர்களுக்கும், இறுதியாத்திரியையின் போது பெருந்திரளாக திரண்டு வந்து மரியாதை செய்தவர்களுக்கும், லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வருகைதந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட நண்பர்கள், உறவினர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிக்கிரியை நாளன்று ஜெயதுர்க்கா ஆலய நிர்வாக சபை சார்பில் சிவா சின்னத்தம்பி அவர்களுக்கும், மிசிசாக இந்து மகா சபை சார்பில் அஞ்சலி உரையாற்றிய எஸ்.எஸ். அச்சுதன்பிள்ளை அவர்களுக்கும், பத்தரிகையாளர் தமிழருவி நயினை விஜயன் - ஜெயசந்திரன் அவர்களுக்கும், எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கும், CTR வானொலி, உலகத்தமிழர், ஈழமுரசு ஆகிய பத்ரிரிகைகள் எமது குடும்பத்தலைவர் பற்றிய பல்வேறு தகவல்களை வெளியிட்டமைக்காகவும், செல்வா தேனுசா (Logi) பரநிர்பசிங்கம் ஈரா சுப்பர் மார்க்கெட் உரிமையாளர் திரு ராஜரத்தினம் ரஞ்சன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

- வேலுப்பிள்ளை + நாகம்மா
  - நாகலிங்கம்
  - தங்கம்மா + செல்லத்துரை
  - மாணிக்கம் + சோமசுந்தரம்
  - கண்மணி + தம்பையா

- வேலுப்பிள்ளை + பொன்னம்மா
  - இராசம்மா
  - கந்தையா + கனகம்மா
  - பர்வதம் + சுந்தரம்பிள்ளை
  - அன்னலட்சுமி + இராசையா
  - மங்கையற்கரசி + பொன்னுத்துரை

- நீலாயதாட்சி + இராஜகதிர்வேல் (நாகலிங்கம், இராசம்மா ஆகியோரிடமிருந்து)
  - பரணிதரன் + லோஜினி
    - கார்திகா
    - கௌசிகன்
  - பவானி + இராயேந்திரன்
    - சாயினி
    - சாகித்தியா
    - இரச்சகன்
  - பத்மேஸ்வரன் + சிவஞானி
    - அயன்
    - தர்மன்
  - பாமினி + துவாரகநாதன்
    - தேனுயன்
    - சாரங்கா
  - பகீரதன் + ஜனனி
    - பிரவீன்
  - பகீரதி + கமலேஸ்வரன்
    - பிரணவி
    - யாகவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகலிங்கம் + நாகம்மா

நீரஜா + சிவபாலன்
↓
சாஜி சிவாஜினி
சாஜி கிருசான்

தியாகராஜா + லோகேஸ்வரி
↓
சிவநிதி + சுந்தரவேல் → சுஜிதன், சுரேக்கா

சிவஞானி + பத்மேஸ்வரன் → அயன், தர்மன்

+ மோகனராஜன் → பிர்ந்தன்

சிவராஜி (மாவீரர்)

சிவாஜினி + மதன்குமார் → வர்ஸ்ஜ, கேவின்

லவகுசன் + வேஜினா → லேயா, தேயோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுருநாதன் அவர்களின் வம்சவிருட்சம்



**நாகலிங்கம் + இராசம்மா**

- இராஜகதிர்வேல் + நீலாயதாட்சி
- சண்முகலிங்கம் + நாகம்மா
- **சிவகுருநாதன்**
- தியாகராஜா + லோகேஸ்வரி

**ஐயம்பிள்ளை + மரியமுத்து**

- அப்பையா + காமாட்சிப்பிள்ளை
- மீனாட்சி + சுப்பிரமணியம்
- பிலோமினா (மணி) + நடராசா
- அன்னமலர் + பிரான்சிஸ் சேவியர்
- புஸ்பராணி
- திரேசம்மா + மரியநாயகம்
- செல்வநாயகம் + மஞ்சுளா

**சிவகுருநாதன் + புஸ்பராணி**

- பாலமுரளி + சறோஜினி → சரண், சாருகன்
- பாலதர்சினி + தவராசா → கிரிஷன், பவிஷன்
- பாலசந்திரன் + பவானி → சிவராஜி, விஸ்ணு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அதுவே வோறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

— பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் —





brightsun print
416-845-6565

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org